26வது ஆண்டில்
கனடாவின் முத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
(for your Home & Auto)

மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2016

# வன்கூவரின் ஆதன வியாபாரத்தில் மாகாண அரசின் முடக்கம்!

பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசு வன்கூவர் மாநகரின் கட்டுங்கடங்காத ஆதன விலை ஏற்றத்தைக் கட்டுபடுத்த வெளிநாட்டவர்களுக்கு 15% மேலதிக ஆதன மாற்றுவரியை விதித்துள்ளது. இது 2016 ஓகஸ்ட் 2இல் இருந்து அமலுக்கு வருகிறது. இந்தப் புதியசட்டம் வன்கூவர் மாநகரில் வீடு வாங்கும் வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அமல்படுத்தப்படும்.




பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசின் நிதி அமைச்சர் மைக் டி யொங் (Mike de Jong) இந்தப் புதிய சட்டமூலத்தைப் பற்றிக் கூறுகையில் வன்கூவர் மாநகரில் $2 மில்லியன் பெறுமதியான வீடு ஒன்றை வாங்கும் வெளிநாட்டவர் மேலதிகமாக $300,000 ஐ ஆதன மாற்று வரியாகக் கட்ட வேண்டும் என்றார்.

தற்போது பிரிட்டிஸ் கொலம்பியாவில் வீடு வாங்குபவர்கள் ஆதன மாற்றுவரியாக முதல் $200,000 இற்கு 1% உம், மீதி $1,800,000 இற்கு 2% உம் அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கு 3% உம் கட்ட வேண்டும். இது வெளிநாட்டவர்களுக்கு மேலதிக 15% ஆல் 2016 ஓகஸ்ட் 2ஆம் திகதியில் இருந்து அதிகரிக்கப்படுகிறது. ஒன்ராறியோவில் ஆதன மாற்றுவரி வேறுவிதமாகக் கணக்கிடப்படுகின்றது

பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் ஆதன விலை அதிகரிப்பால் அரசின் 2015/2016 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக வருமானமாக $730 மில்லியன் கிடைத்துள்ளது. இது அரசு எதிர்பார்த்த மேலதிக வருமானத்தை விட $605 மில்லியன் அதிகமாகும். 2015/2016 ஆம் நிதி ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசுக்கு ஆதன மாற்றுவரி மூலம் மட்டுமே $1.53 பில்லியன் கிடைத்தது. இது கடந்த ஆண்டை விட 44% அதிகரிப்பாகும்.

பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண நிதி அமைச்சர் மைக் டி யொங் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் இந்த 2016/2017 நிதி ஆண்டின் ஆதன மாற்றுவரி மூலம் கிடைத்த வருமானம் ஏற்கனவே எதிர்பார்த்ததை விட அதிகம் என்றார். அதன் விபரம் 2016 செப்ரெம்பரில் வெளியிடப்படும் என்றார்.

வெளிநாட்டவர்களுக்கான மேலதிக ஆதன மாற்றுவரி விதிப்பின் முக்கிய நோக்கம் நடுத்தரவருமானம் உள்ளவர்களுக்கு ஆதனம் வாங்கக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதே என்றார். இம்மேலதிக வரியால் பெறப்படும் வருமானம் வீடு, வாடகை மற்றும் இவை தொடர்பான ஆதரவுத்திட்டங்களுக்குச் செலவழிக்கப்படும் என்றார்.

நடுத்தர வருமானம் உள்ள வாடகை வீடுகளில் குடியிருக்கும் பிரிட்டிஸ் கொலம் பியா மக்கள் தமது வருமானத்திற்கு ஏற்ப வசதியான வீடு

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
MORTGAGE ALLIANCE

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca


JEN BOOKSTORE
Wide Range of Books Are Available:
*School text books( According to Ontario Curriculum)
*Math Workbooks( From Kindergarten– Grade 12)
*Science Workbooks ( From Grade 1– Grade 12)
* French books
*Phonic Books
*English/ French Dictionaries
*Roman Catholic Bibles & Books on Spirituality
*Cook books by the famous Damu
*Convenience Items
*Accessories
80 Nashdene Road, Unit 212, Block C Scarborough
416-738-8824


IB MATH
SUMMER CAMP 2016
Practice tests, workbooks & textbooks are available!
We cover 100% of the IB Math Curriculum
You can finish your IB Math Syllabus in one month! JOIN NOW!
15 years of experience in teaching Math
IN SCARBOROUGH, MARKHAM & STOUFFVILLE LOCATIONS
For further information, please contact: 416.738.8824


JOIN
OUR TEAM
We're hiring now in these areas:
Alterations/Tailor Shop
Cosmetics
Designer Sales
CF Toronto Eaton Centre (opens September 16)
Yorkdale Shopping Centre (opens October 21)
APPLY TODAY AT CAREERS.NORDSTROM.COM
NORDSTROM


Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# வன்கூவரில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்றை வாங்க அரசு வசதி செய்து கொடுக்கும் என பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் கிறிஸ்ரி கிளார்க் (Christy Clark) ஊடகங்களுக்கு 2016 யூலை 25இல் தெரிவித்தார்.



வன்கூவர் மாநகர முதல்வர் ஹிரகர் றொபேர்ட்சன் (Gregor Robertson) மாகாண அரசின் வரி விதிப்பை வரவேற்றுப் பேசுகையில் மாகாண அரசு இதை நீண்ட காலத்திற்கு முன்னரே கொண்டு வந்திருக்க வேண்டும் என்றார். தான் கடந்த பல வருடங்களாகவே மாகாண அரசை இது விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி வந்ததாகக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தச் சட்ட மூலம் போதிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தற்போது கூற முடியா விட்டாலும் விலை கூடிய ஆதன மாற்றத்தில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம் என்றார்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசு கடந்த நான்கு நிதியாண்டுகளாகத் தொடர்ந்தும் மேலதிக வருமானம் காட்டும் வரவு செலவுத்திட்டத்தையே சமர்ப்பித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்துவரும் மூன்று நிதி ஆண்டுகளுக்கும் மேலதிக வருமானம் காட்டும் வரவு செலவுத்திட்டத்தையே தருவோம் எனவும் அரசு உறுதியளித்துள்ளது.

புதிய ஜனநாயகக்கட்சியின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான டேவிட் எபி (David Eby) இந்த வெளிநாட்டவர்களுக்கான மேலதிக ஆதன மாற்றுவரி பற்றிக் கூறுகையில் இந்தச் சட்டமூலம் வெளிநாட்டுப்பணத்தைக் குறிவைப்பதற்குப் பதிலாக வெளிநாட்டவரை (மக்களை) தவறாகக் குறிவைத்துள்ளது என்றார். பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு புதிதாகக் குடிபெயர்ந்து பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலேயே வேலை செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் இன்னமும் கனேடியக் குடியுரிமை பெறாதபடியால் ஆதனம் வாங்கும்போது இந்த மேலதிக ஆதன மாற்று வரியைக் கட்ட வேண்டும் என்றார்.

வன்கூவர் மாநகர ஆதனச் சபைத்தலைவர் டான் மொறிசன் (Dan Morrison) கூறுகையில் இந்த மேலதிக ஆதன மாற்றுவரி அதிகரிப்பை மாகாண அரசு எட்டுநாள் முன்அறிவிப்புடன் அமலுக்குக் கொண்டு வருவது பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார். மாகாண அரசு இது விடயத்தில் இத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை செய்யவில்லை எனவும் மாகாண அரசின் மீது குற்றம் சாட்டினார்.

மேலும் இந்த முறை ஓகஸ்ட் 02, 2016 இலிருந்து அமலிற்கு வருவதால் ஏற்கனவே 2-3 ஆண்டுகளுக்கு முன்பே ஆதனம் வாங்கியிருந்தாலும் இதுவரை குறிப்பிட்ட ஆதனத்தின் பெயர் மாற்றப் படாமல் இருப்பின் (Title Transfer) இந்தப் பெயர் மாற்றம் ஒரு வெளிநாட்டவருக்கு ஓகஸ்ட் 02, 2016 இற்குப் பின்னர் செய்தால் அவர்களும் மேலதிக ஆதன மாற்று வரியைச் செலுத்த வேண்டும்.

CBC செய்தி நிறுவனம் பிரிட்டிஷ் கொலம்பியா அரசின் இந்தச் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கான விளக்கமாக அரசு பின்வருமாறு தெரிவித்துள்ளது எனக்கூறியுள்ளது. வெளிநாட்டவர் எனப்படுவோர் கனேடியக் குடியுரிமையோ அல்லது கனேடிய நிரந்தர வதிவிட உரிமையோ அற்றவர் ஆவர்.

## தமிழர் மீதான கறுப்பு யூலைக் கலவரம் - கனேடியப் பிரதமர் இரங்கல்

33 ஆண்டுகளின் முன்னர் இலங்கையில் சிங்களப் பேரினவாதிகளால் தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை கோரச் சம்பவம் தொடர்பில் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இரங்கல் வெளியிட்டுள்ளார்.



கனேடியத் தமிழ் மக்கள் உட்பட உலகம் எங்கும் வாழும் தமிழர் இந்தக் கறுப்பு யூலையினை நினைவுகூரும் நிலையில் அறிக்கை ஒன்றின் வாயிலாகப் பிரதமர் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

கறுப்பு யூலையின் இந்த 33ஆவது ஆண்டு நினைவுநாளில், கனடாவில் உள்ள அனைத்துத் தமிழ் மக்கள் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுடன் தாமும் இணைந்து கொள்வதாகப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




GTA SQUARE MALL
5215 FINCH AVENUE EAST TORONTO ON. M1S 0C2 416-292-4400
We are proud to Feature more than 50 Specialty Stores & Offices Under one Roof
Welcome to GTA Square Mall...
1st South Asian Indoor Mall in North America.
We are committed to provide you an ultimate shopping experience.
8TH ANNUAL SUMMER FESTIVAL AUG.13 & 14, 2016
Conveniently located in East Toronto.
We offer a comfortable environment and great shopping facilities at GTA Square.
We have lots happening throughout the year to make your visit even more enjoyable.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## நல்ல ரேட்ல மோட்கேஜ்,
## லைன் ஒப் கிரெடிட்,
## ரீபைனான்ஸ்,
## 2வது, 3வது மோட்கேஜ்,
## பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
## எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
## வீடு வாங்க, விற்க

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | Call Us |
| 2 Yrs Fixed Rate : | 2.09%* *OAC |
| 5 Yrs Fixed Rate : | 2.39 % * |

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

கடன் தொல்லையில் இருந்து விடுபடுவோம்.



உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

And,,
*For All Your Real Estate Services*

# யாழ். பல்கலைக்கழக சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய்தல் அவசியமானது!

- விகிர்தன் -

கடந்த மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் நாட்டில் அமைதியை விரும்பும் மக்களுக்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. நல்ல வேளையாக நிலைமை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு விட்டது.

இன்றிருக்கும் அரசாங்கத்தை எவ்வாறு கவிழ்ப்பதென்று வழி தேடிக்கொண்டிருப்பவர் களுக்கு இனவாதம் ஒரு முக்கிய ஆயுதமாக இருக்கின்றது. தமிழ் பிரதேசங்களில் ஏதாவது ஒரு குற்றச் செயல் நடைபெற்றாலும் அது புலிகளின் பின்னணியில் நடைபெறுகின்றது, புலிகளை மீளுருவாக்கும் முயற்சியாளர்களால் மேற்கொள்ளப்படு கின்றது எனத் தொடர்ந்து கூறிவரும் தரப்பினர் எங்காவது தீப்பற்றி எரிய வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். இதற்காக மாணவர் சமூகத்தை உசுப்பேற்றுவதும் அவர்களின் நோக்கமாக இருக்கலாம்.

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்களும் பயில் கின்றனர். இது ஒரு இனப்பிரச்சினையாக உருவெடுத்து அங்கும் மோதல்கள் இடம் பெற்றிருக்குமானால் நிலைமை மோசமாகியிருக்கும். யாழ். பல்கலைக்கழகத்தில் பற்றிய சிறு பொறி தீயாகப் பரவிவிடக் கூடாது என்பதை தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் சிங்கள மக்கள் பலரும் கூட விரும்பினர். அதேபோல் நிலைமை அன்றைய தினத்துடன் தணிந்து விட்டது. ஆனால், இந்த சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய்ந்து அதனை முளையிலேயே களைய வேண்டியது மிக முக்கியமானதாகும்.

போர் முடிவிற்கு வந்ததன் பின்னர் தெற்கிலிருந்து சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர். இவ்வளவு காலமும் அவர்களிடையே எவ்வித மோதலோ அல்லது பகையுணர்வோ வெளிப்படுத்தப்படவில்லை. சிங்களவர்களால் கொண்டாடப்படும் வெசக் பண்டிகை தற்போது தமிழர்கள் வாழும் பிரதேசங்களி லும் கொண்டாடப்படுகின்றது. இந்நிகழ்வு களில் தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வதை காணமுடிகின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்க ளால் ஏற்பாடு செய்கின்ற வெசக் நிகழ்வுகளில் தமிழ் மாணவர்களும் கலந்து கொள்கின்றனர்.

ஆனால், புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கண்டிய நடன நிகழ்வுடன் நடத்தப் பட வேண்டும் என சிங்கள மாணவர்களும், தமிழ் பண்பாட்டு முறைப்படி நாதஸ்வர இசையுடன் நடத்தப்பட வேண்டும் என தமிழ் மாணவர்களும் வாதிட்டமை இறுதியில் மோதலில் கொண்டு போய் விட்டுவிட்டது. இது தொடர்பில், இன்று பல்வேறு விடயங்கள் பேசப்படுகின்றன. வரவேற்பு நிகழ்வில் நாதஸ்வரம் மேளம் இடம்



பெற்றாலும் கண்டிய நடனத்தையும் வரவேற் பில் இணைக்க வேண்டும் என சிங்கள மாணவர்கள் முதல் நாளே விஞ்ஞான பீடத் தலைவரிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டதாகவும், அதன் பின்னர், கண்டிய நடனத்தை வலிந்து திணிக்க முற்பட்ட நிலையிலேயே மோதல் நிலை ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றது. இந்நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தில் சிறுபான்மையாகவுள்ள சிங்கள மாணவர் களுக்கு பின்னணி சக்திகள் தூண்டுதலாக இருந்தனவா என்கின்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இப்பிரச்சினை குறித்து சிங்கள மாணவர் களுடன் பேச்சு நடத்தச் சென்ற பேராசிரியரு டன் கடுமையான வார்த்தைப் பிரயோகங் களை சிங்கள மாணவர்கள் மேற்கொண்ட தாகவும், இதன் பின்னர் மாணவர் குழுக் களிடையே வாக்குவாதங்கள் முற்றி, மோதல் உருவெடுத்ததாகவும், இரண்டு தரப்பினரும் கல் வீச்சில் மாறி மாறி ஈடுபட்டதாலேயே பெரும்பாலான மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதே வேளையில் கைகளில் சில மாணவர்கள் பொல்லுகளுடன் காணப்பட்டனர். அவர்கள் முன்னரே ஒரு மோதலுக்குத் தயார் நிலையில் இருந்தனரா என்ற கேள்வியும் இதனடிப்படையில் எழுகின்றது.

நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் பொலிஸார் ஒரு புறமும், பல்கலைக்கழகத் தால் அமைக்கப்பட்டுள்ள குழுவினர் இன் னொரு புறமாகவும் ஆராய்ந்து வருகின்றனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்படி ஏழு மாணவர்களுக்கு நீதிமன்றம் தற்போது அழைப்பாணை விடுத்துள்ளது. இவர்களில் நான்கு சிங்கள மாணவர்களும், மூன்று தமிழ் மாணவர்களும் அடங்குவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் தமிழ் கலாசார முறைப்படி, புதிய மாணவர்களை வரவேற்பதுதான் சரி என்று எண்ணியது தவறா? என்ற கேள்விக்கு தற்போது சிங்களப் பேராசிரியர் ஒருவரே சரியானதொரு விளக்கத்தை வழங்கியுள்ளார். களனி பல்கலைகழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் கல்கந்த தர்மானந்த தேரர் இவ்விளக்கத்தை கொடுத்திருக்கின்றார்.

ஒரு பல்கலைக்கழகம் தனது பிரதேசத்தை சேர்ந்த கலாசாரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை யாரும் தவறென குறிப்பிட முடியாது என அவர் கூறுகின்றார்.

களனிப் பல்கலைக்கழகத்திலோ பேராதெ னிய பல்கலைக்கழகத்திலோ பெரும்பாலான நிகழ்வுகள் அந்தப் பிரதேசம் சார்ந்த முறைப்படியே நடைபெற்று வருவதால் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் தமது பிரதேச கலாசாரத்துக்கு முன்னுரிமை கொடுப்பதனை தவறென கூறமுடியாது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

தமிழர்கள் சிங்களவர்களை தாக்குகிறார்கள் எனத் தென்னிலங்கையிலும், இராணுவத்தின் துணையுடன் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களை தாக்குகிறார்களென வடக்கி லும் ஒரு பயப்பீதி உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலைமை அவ்வாறல்ல. பல்கலைக் கழக தாக்குதல்கள் என்றுமே புதியதல்ல. சில பல்கலைக்கழகங்களில் மாணவர் உயிரிழப்புக்கள் கூட ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தப் பிரச்சினை மட்டும் என்றுமில்லாதவாறு மிகவும் பெரிதாக்கப் பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் பற்றி வடமாகாணசபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப் பிடப்பட்டுள்ளவற்றையும் இங்கு கவனத்தி லெடுக்க வேண்டும்.

‘இந்த சம்பவத்தின் அடிப்படைக் காரணங் களை ஆராய்ந்து, அவற்றை நிவர்த்தி செய் வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவதன் மூலம்தான் இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய முடியும்.

வெறுமனே, இவ்வாறான சம்பவங்களைக் கண்டிப்பதனாலோ, சம்பந்தப்பட்ட மாணவர் களை விசாரித்துத் தண்டிப்பதன் மூலமாக வோ நாம் உண்மையான புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியாது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் நிய-ாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவர்கள் தமக்கான நியாயங் களைக் கோரி சாத்வீக ரீதியில் மேற் கொண்ட நடவடிக்கைகளை அலட்சியம் செய்து, அவற்றை ஒரு குற்றவியல் செயற்பாடாகக் கருதியதன் விளைவாகவே இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேர்ந்தது.

ஆதலால், பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறான நிலைமைக்குச் செல்வதற்கு அடிப்படையாக இருந்த காரணிகளை முற்றாக அறிவதற்கு ஓர் ஆக்கபூர்வமான விசாரணைக்குழு அமைத்து ஒரு பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்றோம். இவ்வாறு செயற்படுவதன் மூலமே மாணவர்களின் உண்மையான ஆதங்கங்களை அறிந்து அதனைத் தணிப்பதற்கான வழிமுறைகளை ஆராய முடியும். மேலெழுந்த வாரியான செயற்பாடு கள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யுமேயொழிய உண்மையான புரிந்துணர் தலை ஏற்படுத்த வழிகோலாது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில்

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



- Large laundry Folding Tables, Lots of Space
- We offer wash, Dry & fold at .99Cents /lb

**Commercial**

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence - find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம்.

## குடியரசுக்கட்சி



2016 யூலை 18 இல் இருந்து 21 வரை Cleveland, Ohio இல் நடைபெற்ற குடியரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் Mike Pence குடியரசுக்கட்சியின் உபஜனாதிபதி வேட்பாளராகவும் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டனர். உபஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்ட Mike Pence தற்போது இன்டியானா மாநில ஆளுநராக உள்ளார்.

குடியரசுக்கட்சியின் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுபவரே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவர். மாநாட்டில் அமெரிக்காவின் 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் பெயர்கள் ஆங்கில அகரவரிசையில் வாசிக்கப்பட்டு அவற்றின் பிரதிநிதிகளின் வாக்கெடுப்பு நடைபெற்றது. நியூயோர்க் மாநிலத்தின் பெயர் வரும்போதே Donald Trump ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட தேவையான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுவிட்டார். வாக்களிப்பு முடிவடையும் போது Donald Trump இற்கு 1,725 பிரதிநிதிகளின் ஆதரவு கிடைத்திருந்தது.

District of Columbia இல் இருந்து தெரிவு செய்யப்பட்டு வந்த 19 பிரதிநிதிகளில் 10 பேர் Marco Rubio இற்கும் 9 பேர் John Kasich இற்கும் தாங்கள் தெரிவு செய்யப்பட்டவாறு வாக்களிக்க முயன்றனர். ஆனால் District of Columbia அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் இருந்து விலகினால் அவர்கள் வாக்குகள் எஞ்சியிருக்கும் வேட்பாளருக்குப் போகவேண்டும். அதன்படி மாநாட்டின் செயலாளர் 19 பிரதிநிதிகளின் வாக்குகளையும் Donald Trump இற்கு அளிக்கும்படி உத்தர விட்டார். குடியரசுக் கட்சியின் தேசியக் குழு தலைவர் Reince Priebus மேற்கூறிய விதி நாலு மாநிலங்களின் அரசியல் யாப்பில் இருப்பதால் அந்த நான்கு மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எல்லாப் பிரதிநிதிகளின் வாக்குகளும் Donald Trump இற்குப் போக வேண்டும் என்றார்.

56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் நடைபெற்ற தேர்தல்கள், 17 முக்கிய குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர்களின் போட்டி, 16 மாத காலப் பிரசாரம், $614 மில்லியன் செலவு என்பவற்றிற்குப் பின்னர் குடியரசுக்கட்சி உத்தியோக பூர்வமாக தனது ஜனாதிபதி வேட்பாளராக Donald Trump ஐயும் உபஜனாதிபதி வேட்பாளராக Mike Pence ஐயும் தெரிவு செய்தது.

## ஜனநாயக் கட்சி

2016 யூலை 25 இல் இருந்து 28 வரை Philadelphia, Pennsylvania இல் நடைபெற்ற ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாட்டில் Hillary Clinton ஜனநாயக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் Tim Kaine ஜனநாயகக்கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராகவும் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டனர். உப ஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்ட Timtothy Michael Kaine ஒரு வழக்கறிஞரும் Virginia வின் செனட்டரும் ஆவார்.

ஜனநாயகக்கட்சியின் 4,763 பிரதிநிதிகளில் குறைந்தது 2,382 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுபவரே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவர். மாநாட்டில் 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவற்றின் பிரதிநிதிகளின் வாக்கெடுப்பு நடைபெற்றது.



South Dakota இன் பெயர் வரும்போதே Hillary Clinton ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படத் தேவையான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுவிட்டார்.

வாக்களிப்பு முடிவடையும் தறுவாயில் Hillary Clinton இற்கு 2,838 பிரதிநிதிகளின் ஆதரவும் Bernie Sanders இற்கு 1,843 பிரதிநிதிகளின் ஆதரவும் கிடைத்தது. 55 பிரதிநிதிகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இறுதியாக Vermont செனட்டரான Bernie Sanders தனது மாநிலத்தின் 26 பிரதிநிதிகளின் வாக்கெடுப்பு வாசிக்கப்பட்டு கணக்கில் எடுக்கப்பட முன்னர் (22 பிரதிநிதிகள் Bernie Sanders மற்றும் 4 பிரதிநிதிகள் Hillary Clinton இற்கும் சார்பாக தெரிவானவர்கள்) Hillary Clinton இற்கு ஜனநாயக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படத் தேவையான பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றுவிட்டார் எனக்கூறி வாக்கெடுப்பை முடித்து Hillary இற்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மிகப்பெரிய கட்சிகள் இரண்டில் ஒன்றான



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.




\- ஆதித்தன் -

# அங்கங்களை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காத மாற்றுத்திறனாளிகள்

போரினால் பாதிக்கப்பட்டோரில் மாற்றுத் திறனாளிகள் என்று குறிப்பிடப்படும் உடல் ஊனமுற்றோரின் பிரச்சினை இன்று கவலை தருவதாகவுள்ளது. அண்மையில் மாற்றுத் திறனாளிகள் சிலரை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, அவர்களது பிரச்சினைகளை அவர்கள் மூலமாகவே அறியக் கூடியதாகவிருந்தது.

கை, கால்களை இழந்தவர்கள், பார்வையற்றோர், முள்ளந்தண்டு பாதிப்படைந்ததால் சக்கரக் கதிரையிலேயே நாட்களை கழிப்பவர்கள் என பலதரப்பட்டவர்களை சந்திக்கும்போது, அவர்கள் தங்களுக்குத் தேவையான, அடிப்படையான வசதிகளைக் கூடப் பெறமுடியாமலிருப்பதை உணர முடிந்தது.

முதலாவது, அவர்களுக்கான மருத்துவ உதவிகள் மிகவும் அவசியமானதாகவுள்ளது. அதற்கான சிறப்பு மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு என தனியான பிரிவு ஒன்றும் அவசியமாகின்றது. வைத்தியசாலைகள் இல்லாத ஊர்களில் மாதந்தோறும் மருத்துவ முகாம்களை நடத்துவதும் இன்றியமையாத ஒன்று. இவ்வாறான மருத்துவ தேவைகளை மாற்றுத்திறனாளிகள் கோரி நிற்கின்றனர். குறிப்பாக, போரின் போது காயப்பட்டு, முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோராக கணிசமானோர் உள்ளனர். அவர்களுக்குத் தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சைகள் அத்தியாவசியமானவை. கால்களை இழந்தவர்கள் பலர் பிளாஸ்ரிக் கால்கள் பொருத்தப்பட்ட நிலையில் நடமாடுகின்றனர். சிலருக்கு அவ்வாறான கால்களைப் பயன்படுத்த முடிவதில்லை. கால்கள் முழங்காலுக்கு மேல், தொடையளவில் பாதிப்படைந்து அகற்றப்பட்டவர்கள் ஊன்று கோலின் உதவியுடனேயே நடமாடுகின்றனர். அந்த ஊன்றுகோல் பழுதடையும் போது, மாற்று ஊன்றுகோலினைப் பெறுவதிலும் சிக்கல்களையும் பல்வேறு கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாற்றுக் கால்களைப் பொருத்த முடியாத இளம் யுவதி ஒருவர் இதனைக் கூறினார்.



அடுத்ததாக, அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் முறையாக வழங்கப்படுவதில்லை. அரசாங்கத்தால் அவர்களுக்கு மாதாந்தம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட சிறுதொகை கூட தற்போது வழங்கப்படுவதில்லை என அவர்கள் கூறுகின்றனர். மாற்றுத்திறனாளிகளாகவுள்ள சிலர் தங்களின் சொந்த முயற்சியினால் சில தொழில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். சிலர் அதன் மூலம் சுயமாக தொழில்களையும் மேற்கொள்கின்றனர். எனினும், தாங்கள் முறையாக அவற்றை மேற்கொள்வதற்கான முதலீடுகள் இல்லை என அவர்கள் கூறுகின்றனர்.

சக்கரக் கதிரைகளில் இருந்து செயற்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் சிலர் கணினித் துறையில் பணியாற்றக் கூடியவர்களாகவும், தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட வேலைகளை மேற்கொள்ள விரும்புகின்றவர்களாகவும் உள்ளனர். பார்வையை இழந்தவர்கள் கூட நவீன தொழில்நுட்ப முறையினைப் பயன்படுத்தி தங்களால் கணினி அறிவினைப் பெற்றுப் பணியாற்ற முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

சிலர் வேறு வகையிலான சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ள ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவையானதெல்லாம் பயிற்சியும், முதலீட்டிற்கான உதவிகள் மட்டுமே. அங்கங்களை இழந்தவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படவில்லை. தங்களுக்கான ஆரம்ப உதவிகளை யாரேனும் மேற்கொண்டால் தாங்களே தங்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியும் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாகக் அவர்கள் காணப்படுகின்றனர்.

அரசியல்வாதிகளின் உறுதிமொழிகளைக் கேட்டு தாங்கள் ஏமாற்றமடைந்துள்ளதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். போரையும், போரினால் ஏற்பட்ட விளைவுகளையும், பாதிக்கப்பட்ட மக்களையும் பற்றித் தேர்தல் காலங்களில் பேசுகின்ற அரசியல்வாதிகள் பின்னர் அதனை மறந்து விடுகின்றனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். குறித்த அரசியல்வாதிகள் தங்களின் பிரச்சினைகளை உரியவர்களிடம் சரியாகக் கொண்டு சேர்ப்பதில்லை எனவும் அவர்கள் குறைகூறுகின்றனர். இதனால் தாங்கள் தங்களுக்கான அமைப்பு ஒன்றினை உருவாக்கி அதன்மூலமாக தங்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும் உரியவர்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்தவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வட மாகாணத்தில் மட்டும் 16 ஆயிரத்து 213 மாற்றுத்திறனாளிகள் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 4003 பேர் மட்டுமே அரசாங்கத்தால் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவான மூவாயிரம் ரூபாவை பெறுவதாகவும், ஏனையோருக்குக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை என்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மாற்று வலுவுள்ள, வட மாகாணத்திலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், மடிக்கணினி பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டிய அவர், தவணைக் கட்டணங்களைச் செலுத்தி, அவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடு காணப்படுகின்ற போதிலும், அதைச் செலுத்துவதில் கூட சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்கள் காணப்படுவதாகவும் அதற்கான மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.



வன்னியிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான கால்கள் ஊன முற்ற மாணவர்கள் பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்கள் இருக்கும் மேல் மாடிகளுக்கு ஏறிஇறங்க முடியாததால் மாதக்கணக்கில் பல்கலைக்கழக விரிவுரைகளில் கலந்து கொள்ளாமலிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இதற்கான மாற்று ஏற்பாடுகளை எவரும் மேற் கொண்டதாக இல்லை. கால்கள் ஊனமுற்றோர் மாடிகளில் ஏறிஇறங்குவதற்கான நவீன தொழில் நுட்ப சாதனங்கள் உள்ளன என்றும், அவ்வாறான சாதனம் ஒன்றேனும் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் இருக்குமானால் தங்களால் பல்கலைக்கழக விரிவுரைகளில் கலந்து கொள்ள முடியும் என்றும் குறித்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கங்களை இழந்தும் நம்பிக்கையை இழக்காமலிருக்கும் அவர்களுக்கு இப்போது தேவை உதவிகள் மட்டுமே. வாழ்நாள் முழுவதும் எவரதும் உதவிகளைப் பெற்று வாழ அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கான ஆரம்ப உதவிகளை மட்டுமே எதிர்பார்க்கின்றனர். இதனைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் மட்டுமல்லாமல் உதவிசெய்யக் கூடிய வளமும், மனமும் உள்ள அனைவரும் முன்வர வேண்டும்.

முதலில், மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் சரியான புள்ளி விபரங்களை திரட்ட வேண்டும். அவர்களின் அங்க இழப்புக்களை வகைப்படுத்த வேண்டும். அவர்களின் மருத்துவ தேவைகள், கல்வித் தேவைகள், தொழில் பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் தொடர்பில் முறையான மதிப்பீடு ஒன்றையும் மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர், அரசாங்கத்திடமோ, வெளிநாடுகளிடமோ, உதவக் கூடிய கொடையாளிகளிடமோ கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். இவ்வாறானதொரு வேலைத் திட்டம் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருந்தால் போர் முடிவுற்று ஏழு வருடங்கள் கடந்த பின்னரும் மாற்றுத்திறனாளிகள் துன்பறும் நிலை ஏற்பட்டிருக்காது.

முறைப்படியானதும், அர்ப்பணிப்பு உணர்வுடனானதுமான ஒரு வேலைத்திட்டம் இன்றி வெறும் வாய்ச் சொல்லிற்கூடாகவே போரின் பின்னராக காலம் தொடர்ந்து நகர்கின்றது. எதுவுமே நடைபெறாத நிலையிலேயே இன்று தங்களுக்கான அமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த அமைப்பினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வடக்கிலுள்ள மாற்றுத் திறனாளிகள் திட்டமிட்டுள்ளனர்.

சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் போன்று ஊனமுற்றோருக்கான இல்லங்களும் சில இயங்குகின்றன. அவர்களை அந்த இல்லங்களில் இருத்தி மூன்று வேளை உணவு கொடுப்பதே அவற்றின் பணியாகவுள்ளது. ஆனால், மாற்றுத் திறனாளிகளாகவுள்ள பலரும் அதனை விரும்பவில்லை. தாங்களாக எழுந்த நின்று வாழ வழியொன்றை ஏற்படுத்தித் தருமாறே கேட்கின்றனர்.

விளம்பரம் VLAMBARAM™
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Top & Centre Island




4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk-In Closet




4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom




3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place




3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace




4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining




4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage




3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails




3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete




3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen




3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking




3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath




3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony




3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home

KZG 647-200-5833



Sell your home faster and more money

RE/MAX Platinum Club Award

ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

Your Home Sold In 30 Days or We buy it

When you list your home with Mike, you receive these Guarantees.

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# தமிழர்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இந்த கொடூரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் நினைவு கூர்வதுடன் இலங்கையில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூர்வதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் நண்பர்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இடம்பெற்ற போர், அழிவுகள் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள வடுக்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதனை நினைவூட்டுவதுடன், எம்மத்தியில் பிரிவுகள் இன்றி ஒற்றுமை தழைத்தோங்க வேண்டும் என்பதையும் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வலியுறுத்தியுள்ளார்.




இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை முழுமையாக நிறைவேற்றுமாறு கனடா தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தினை வலியுறுத்தும் எனவும், இலங்கையில் உண்மையான அமைதி, மீள் இணக்கம், பொறுப்புக்கூறல் மக்களுக்கான நீதி என்பவற்றையும் நிலை நாட்டுமாறு அழுத்தங்களைக் கனடா மேற்கொள்ளும் எனவும் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

வடக்கு, கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றுகின்ற எண்ணப்பாட்டு செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், யுத்தக் குற்ற சுயாதீன விசாரணைகள் தொடர்பில் இழுத்தடிப்பு நிலை காணப்படும் சூழலில், பெருவாரியான பிற மாகாண மாணவ, மாணவியரை வடமாகாண பல் கலைக்கழகத்தில் சேர்த்து வருகின்றமை யும், அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் தங்கள் கலை, கலாசாரங்களை யாழ். மண்ணில் திணிக்க முனைவதும், தமிழர்களின் பாரம் பரிய வாழ்விடங்களில் தமது அரசியல் விவகாரங்களைத் தாமே கையாளக் கூடிய வகையிலான அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் தெளிவற்ற போக்கு இருப்பதும், வடக்கு, கிழக்கில் தேவைக்கதிகமான இராணுவத்தினர் தொடர்ந்து இருந்து வருவதும் இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தீனி போட்டு வந்திருந்தனவா போன்ற விடயங்களும் அவ் விசாரணைக்குழுவால் ஆராயப்பட வேண்டியிருக்கும்.



தெற்கிலுள்ள இனவாதிகள் இவ்வாறான சம்பவங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெறுவதைத் தடுப்பதற்கும் இவ்வாறான ஏற்பாடு வழிகோலும்' என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இனங்களுக்கிடையிலான குரோதங்களை ஏற்படுத்தி, கலங்கிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் தரப்பினர் அதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர், புதிய அரசாங்கம் இனங்கள், சமூகங்களிற்கிடையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில் செயற்பட்டு வருகின்றது. ஆனால், இந்த நல்லிணக்கம் பரஸ்பரம் நம்பிக்கையின் அடிப்படையிலும், புரிந்துணர்வின் அடிப்படையிலுமே கட்டியெழுப்பப்பட வேண்டும். திணிப்பாக அதனை முன்னெடுக்க முடியாது என்பதை அரசாங்கம் புரிந்து செயற்பட வேண்டும்.

மனம், அது சிதைவுறும் கணம், அக் கணத்தின் சூழல் மீண்டுமெழுந்து கிளர்த்தும் அதிர்வுகள், அது பரம்பரை பரம்பரையாகத் தொடரும் நுட்பங்கள் ஆகியவற்றை அவற்றின் மருத்துவரீதியான பகுப்பும், முதுமக்கள் ஞானமுமான இரட்டைத் தடத்தில் பின்னோட்ட விசையுள்ள ஒற்றை வாகனம்போல் இந்த நாவலை நகர்த்தியிருக்கிறேன்.

'கந்தில் பாவை' முன்னுரையில்)

06
ஆகஸ்ட்
2016
சனி மாலை
5 மணி

விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில்

தேவகாந்தனின்

கந்தில் பாவை

நாவல் மற்றும் மஹாபாரதத்தின் மறுவாசிப்பான

கதா காலம்

ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு




இடம்: GTA Square (Middlefield Rd & Finch Ave)
தொடர்புகள்: 647 407 8216, 416 500 9016

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் 468

எமது அலுவலகத்தில் புதிதாக இணைந்து கொண்ட வீட்டு முகவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெறுவதற்கான நேரம் மாலை 6:30 மணியை அணுகியது. புதிதாகச் சேர்ந்த இளைஞன் எனது பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். பேச்சில் முதிர்ப்பு இருந்தாலும் அவனின் முகம் இளையவன் என்பதனைக் காட்டிக் கொடுக்கத் தவறில்லை. எந்த ஆண்டில் பிறந்தவன் என்பதனை அறிந்ததும் எமது அலுவலகத்தில் தொழில்புரியும் 150 இற்கு மேற்பட்டவர்களில் மிகவும் வயது குறைந்தவன் என்பதனை மனதில் கணக்கிட்டு விட்டேன். இரு மொழிகளின் பேச்சுகளிலிருந்தும் இலங்கையில் பிறந்தவன் என்பதனையும் புரியக்கூடியதாக இருந்தது. இவ்வளவு குறைந்த வயதில் ஆதனமுகவராக வருவதற்கான காரணம் என்ன என்பதனை அறிய ஆவலாக இருந்தது.

அதனைப்பற்றிய கேள்வியை சாதாரணமாகக் கேட்டபொழுது பொதுவாக சேல்ஸ் (Sales) வியாபாரம் எனக்குப் பிடிக்கும். அத்துடன் எமது குடும்பம் முதல் வீடு வாங்கும்போது எமது முகவர் பல விடயங்களை மறைத்து அந்த வீட்டை வாங்கித் தந்ததால் நாம் பட்ட கஷ்டங்கள் பல. இவ்வாறான நிலைமைகள் மற்றையவர்களுக்கும் வரக்கூடாது. அத்துடன் என்னால் பலருக்கு உதவலாம் என்ற முக்கிய நோக்கமாகவும் இந்தத் தொழிலிற்கு வந்துள்ளதாகக் கூறினான்.

இதே நிலைமை இன்று எமது சமூகத்தில் நடைபெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஓர் ஆதனம் வாங்கும் போது ஏற்படும் மாதாந்தச் செலவுகள் மிகவும் கவனமாகக் கணிக்கப் படல் வேண்டும். ஆனால் பல முகவர்கள் இதனைப்பற்றிய தகவல்களை வாங்குபவர்களுக்கு வழங்குகின்றார்களா? என்பது கேள்வியாகவே உள்ளது.



இவற்றைப் போதியளவு எழுத்தில் வைத்திருத்தல் நல்லது. அதற்கேற்ப மாதாந்தச் செலவைக் கணக்கிட்டு, எமது வருமானத்தின் அறைக்குள் வரக்கூடிய ஆதனத்தை வாங்குவது, புதிதாக எமது நிறுவனத்தில் இணைந்த இளையவனின் குடும்பத்திற்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படுவதனைத் தவிர்க்கலாம். ஓர் இளையவனின் மனதில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆதனம் வாங்குபவர்களும், விற்கும் நாங்களும் கவனத்தில் கொள்வது மிக முக்கியம் என்பது எனது நம்பிக்கை. நம்பிக்கைகள் மாறலாம்.

மேலே குறிப்பிட்ட நிலைமையுடன் அண்மையில் கேள்விப்படும் ஒரு சில விடயங்களையும் சேர்க்கலாம். கடந்த ஓரிரு வருடங்களாக விலையில் ஏற்பட்ட அதீத வளர்ச்சி, விலைப்போட்டிகள் (Multiple Offers), ஆதனம் வாங்கும் போது நிபந்தனைகள் (Condition) இல்லாமலேயே ஆதனத்தை வாங்க வேண்டிய நிலைக்கு வாங்குபவர்கள் தள்ளப்படுகிறார்கள். இதனால் அடமானக் கடன், வீட்டுப்பரிசோதனை (Home Inspection) போன்ற நிபந்தனைகள் இல்லாமல் ஆதனத்தை வாங்குகிறார்கள். இன்றைய காலத்தில் அடமானக்கடன் பெறுவதில் ஏற்பட்ட இறுக்கம் காரணமாக பலர் அடமானக்கடன் பெறுவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். அத்துடன் சிலரினால் அடமானக்கடனைப் பெறாமலே போகின்றது. இவ்வாறாக நிலைமை ஏற்படும்போது ஆதனம் வாங்கும்போது கொடுத்த ஆரம்ப முதலீட்டை (Deposit) இழக்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. எதற்கும் கவனமாக இருத்தல் நல்லது.

இவ்வாறான நிலைமை அடிக்கடி நடைபெறுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்குரிய சிறந்த ஆலோசனைகளைத் தகுந்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# இன்றும் தொடரும் மஹாபாரதம்!

இந்தியாவில் பிறந்துவிட்டால், இராமாயணம் மற்றும் மஹாபாரதம் போன்ற நமது புராணங்களைப் பற்றித் தெரியாமல் இருக்க முடியாது. பாட்டி சொன்ன கதை மூலமோ, பாடப் புத்தகம் வழியாகவோ அல்லது மெகா சீரியலாகவோ, அந்தப் புராணங்கள் நம் வாழ்வின் அங்கமாகிவிடுகின்றன. அப்படிப்பட்ட புராணங்கள் சத்குருவின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கமென்ன? அறிந்து கொள்ளத் தொடர்ந்து படியுங்கள்!



## சத்குரு வாசுதேவ்

சத்குரு: புராணங்களில் எனக்குப் பெரிய ஈடுபாடு கிடையாது. ஆனால் இந்த தேசத்தில் வாழ்ந்து கொண்டு, இராமாயணமோ, மஹாபாரதமோ எந்தப் பாதிப்பும் ஏற்படுத்தவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தப் புராணங்கள் வேறு ஏதோ உலகத்திலிருந்து வந்து இறங்கிவிடவில்லை. இந்தப் பூமியில் வாழ்ந்த மனிதர்களின் பதிவுகளாகவே அதைப் பார்க்கிறேன். நம் நாட்டில் தேதிவாரியாகச் சரித்திரம் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்பதாலேயே, இவர்கள் கற்பனைப் பாத்திரங்களாகிவிட மாட்டார்கள். முக்கியமாக மஹாபாரதம். இது இன்றைக்கும் அர்த்தமுள்ளதாக விளங்குகிறது. இன்றைய நாளிலும் நம்மைச் சுற்றி துரியோதனர்களையும், அர்ச்சுனர்களையும், தர்மராஜர்களையும் உயிரோடு வெவ்வேறு மனிதர்களிடம் காண முடிகிறது. அதே பிரச்சனைகள், அதே பாரபட்சமான மனநிலை, அதே துரோகம், அதே தந்திரங்கள் எல்லாம் மாறவில்லை. மஹாபாரதத்திலும், மற்ற எல்லாரையும் விட கிருஷ்ணன் வித்தியாசமானவன். அழகன். புத்திசாலி. வாழ்க்கையில் லயிப்புக் கொண்டவன். அவனை விளையாட்டுப் பிள்ளையாகவே பலர் சித்தரிக்கிறார்கள். அவனுடைய 16 ஆவது வயது வரைதான் அவன் சேட்டைகள் செய்தான். எப்போது அவனுடைய குரு, வாழ்க்கையின் நோக்கத்தை அவனுக்குச் சுட்டிக் காட்டினாரோ, அந்தக் கணத்தில் கிருஷ்ணன் விளையாட்டுத்தனங்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தான். அதுவரை கோபிகைகளைக் குழலூதி வசீகரித்துக் கொண்டு இருந்தவன், தன்னிலை உணர்ந்த பின், புல்லாங்குழலைத் தன் காதலி ராதையிடம் கொடுத்து விட்டான். அவள்தான் அதற்குப் பின் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டு இருந்தாள். அவனிடத்தில் மாபெரும் ராஜ்யத்தை ஆளும் திறன் இருந்தது. வீரம் இருந்தது. விவேகம் இருந்தது. ஆனால் அதற்கான விருப்பம்தான் இல்லை. அவனுடைய வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தவறாகப் புரிந்து கொண்டவர்களே இன்றைக்கு அதிகம். குறிப்பாக, இன்றைய இளைஞர்கள் அவனைப்பற்றி சரியான தகவல்களைக் கேள்விப்படுவதில்லை. தன்னிலை உணர்ந்தபின், அவன் தன் வாழ்க்கையை ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் வாழலானான். ஆட்சியில் இருந்தவர்களிடத்தில் ஆன்மீகப் பாதையில் செல்லும் ஆர்வத்தைத் தூண்டினான். மனிதர்களிடத்தில், அவர்களால் கவனிக்கப்படாமல் இருந்த ஆன்மீகக் கோணத்தைப் பற்றிய கவனத்தைக் கொண்டு வர முனைந்தான். ஏதோ ஒருவிதத்தில் அரசியலையும், ஆன்மீகத்தை யும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே அவன் நோக்கமாக இருந்தது. எந்தச் செயலையும் ஆழமான ஈடுபாட்டுடன் செய்கையிலும் விளையாட்டுத்தனத்தை விட்டுக் கொடுக்காமல் இருந்தான். உலகில் இன்றைக்கு அதுதான் அவசியத்தேவை. விளையாட்டுத்தனம் அற்ற தீவிர ஈடுபாடு, சர்வாதிகாரப் போக்காக உருமாறிவிடும். ஈடுபாடு இல்லாத விளையாட்டுத்தனமோ பொறுப்பற்ற செயலாகிவிடும். இந்த இரண்டையும் மிகச் சரியான விகிதத்தில் கொண்டு சென்றதால்தான் கிருஷ்ணன் மிக மேன்மையான செயல்களையும் சிரித்துக் கொண்டே செய்ய முடிந்தது. அவனுடைய விளையாட்டுத்தனமும், முழுமையான அர்ப்பணிப்பும், ஞானமும், விவேகமும் பிரமிக்கத் தக்க கலவை. எல்லா அளவுகோல்களிலும் கிருஷ்ணன் அபாரமானவனாக உயர்ந்து நிற்பவன். எந்தத் தலைமுறையும், எந்தக் கலாச்சாரமும் அவனை ஒரு முன்மாதிரியாக ஏற்க முடியும். அதற்காகப் புராண மனிதர்களிடத்திலிருந்துதான் நாம் எல்லாவற்றையும் கற்க வேண்டும் என்று சொல்லவில்லை.



ராமகிருஷ்ணர் ஓர் அற்புதமான கதை சொல்வார். இந்தத் தேசத்தில் ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு சொத்து சுகங்கள் எல்லாவற்றையும் துறந்ததொரு வாழ்க்கையை மேற்கொள்ளும் வழக்கம் இருந்தது. வாழ்க்கையின் பின்பகுதியில் இருந்த ஒரு தம்பதி காசி நோக்கிப் பயணம் கிளம்பினர். போகும் வழியில் தரையில் ஒரு வைரம் கிடப்பதைக் கணவன் கவனித்தார். எங்கே அந்த வைரத்தைப் பார்த்துவிட்டுத் தன் மனைவி அதை அணிந்து கொள்ளும் ஆசையில் துறவற எண்ணத்தைக் கைவிட்டு விடுவாளோ என்று அவருக்குக் கவலை வந்தது. வைரத்தைத் தன் பாதத்தால் மூடி மறைத்தார். அவர் எதையோ மிதித்து மறைப்பதை மனைவி கவனித்துவிட்டாள். "என்ன மறைக்கிறீர்கள்?" என்று கேட்டாள். அவர் பூசி மழுப்பப் பார்த்தார். மனைவி அவர் காலடியில் மறைக்கப்படுவது வைரம் என்பதைக் கவனித்தாள். "மண்ணுக்கும், வைரத்திற்கும் வித்தியாசம் பார்க்கும் நீங்கள் எப்படி எல்லாவற்றையும் துறக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள். கணவர் தலை குனிந்தார். அந்தக் கணவர் வைரத்தைப் பார்த்ததுபோல 'பழையன மட்டுமே மதிப்புமிக்கவை' என்று வாழ்க்கையைப் பார்ப்பதும் முட்டாள்தனம். ஏதோ முந்தைய தலைமுறைகளுக்கு மட்டுமே புத்திசாலித்தனம் இருந்ததாகச் சொல்வது மனித இனத்துக்கே கேவலம்.

புராணங்களிலிருந்துதான் ஞானம் பெற வேண்டும் என்று நான் பார்க்கவில்லை. ஆனால், ஏதோ ஒரு சினிமா நடிகரின் தாக்கத்தை விட கிருஷ்ணனுடைய தாக்கம் நேர்ந்தால் பல மடங்கு சிறப்பானது. நம் குழந்தைகளுக்குப் புராணங்கள் அவசியமா? நிச்சயமாக. அதேசமயம், நம்ப முடியாத கதைகளைத் தவிர்க்க வேண்டும். வாழ்ந்த விதத்திலேயே ராமனும், கிருஷ்ணனும் மேன்மையானவர்கள்தாம். வானில் பறந்தான். கீழிருந்தே மலை உச்சிக்கு கால் எடுத்துவைத்தான் என்றெல்லாம் அவர்களைப் பற்றி நம்ப முடியாதவற்றைச் சொல்லித்தான் புகழ் தேடித் தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. மிகைப்படுத்தாமல், சரியான உண்மைகளை இன்றைய இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org







# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 08

இந்தப் பதிவின் நோக்கம் மாற்று மருந்துகளைக் குறை சொல்வது எம் நோக்கமல்ல. மாற்று மருந்துகளின் பக்க விளைவுகள் என்று சொல்லப்படும் கொடும் விளைவுகளில் இருந்து அப்பாவி மக்களை காப்பாற்றுவதே எம் நோக்கம். ஒவ்வொரு மாற்று மருந்தையும் நீங்கள் உட் கொள்ளும் போதே அந்த மாற்று மருந்தின் விஷம் உடலில் உள்ள ராஜ உறுப்புகளை தாக்கி அழிக்கிறது. இதன் மூலம் பல நோய்களுக்கு உங்கள் உடலின் உள்ளே வரவழைப்பு கொடுத்து விடுகிறீர்கள் என்பதை உணருங்கள்.

மாற்று மருத்துவத்தின் பக்க விளைவுகள் என்னும் (சிறு வியாதிக்குக் கொடுக்கப்படும் மருந்துகளும் பெரும் வியாதிகளை உண்டாக்கும்) கொடூரத் தன்மையையும், அதன் திறனில்லாத தன்மையையும், அதற்கு ஒரு நோயையும் குணப்படுத்தாத திறனற்ற மருத்துவம் என்பதையும் புரிவதில்லை.

வெறும் உடற் கூறுகளைப் பற்றி படிப்பது மருத்துவம் ஆகாது. உடலில் என்ன நடைபெறுகிறது. இயற்கை நம் உடலை எப்படி வைத்துள்ளது. அதில் மருந்துகள் எப்படி செயல்படுகின்றன என்பது ஒரு இயற்கை சார்ந்த அறிவு. இந்த அறிவைப் பெற நம் பார்வையை இயற்கை மீது செலுத்தி அதனுடன் ஒன்றிணைந்தால் போதும்.

ஹோமியோபதியின் தந்தை என்றழைக்கப் படும் மேன்மை தங்கிய மருத்துவர் ஹானிமன் முதன் முதலில் ஒரு மாற்று மருத்துவர். அவர் மாற்று மருத்துவத்தால் எந்த நோயையும் குணமாக்க முடியாது என்பதை தெளிவாக தெரிந்து கொண்டு அதன் பின்னர் உழைப்பிற்காக நிலம் வாங்கி விற்கும் பணியில் ஈடுபடத் தொடங்கினார். அந்தப் பணிக்காக பல்வேறு இடங்களுக்கு செல்லும்போது ஒரு கிராமத்தில் வெயிலில் அலைந்து திரிந்து விட்டு வந்து ஒரு குளத்தில் உள்ள தண்ணீரை தாகம் தீரக் குடித்தார். உடனே சற்று நேரத்திற்குள் அவருக்கு காய்ச்சல் வந்து விட்டது. உடனே அந்த கிராமத்தில் உள்ளவர்களிடம், காய்ச்சலுக்கு அந்தக் கிராமத்தில் மருந்துகள் ஏதேனும் கிடைக்குமா என்று விசாரித்தார்.

''இந்தக் கிராமத்தில் மருந்துகள் ஏதும் கிடைக்காது. இந்தக் குளத்தில் உள்ள தண்ணீரைக் குடித்தீர்களா?'' என்று கேட்டனர் அக்கிராமத்தில் உள்ள மக்கள். மருத்துவர் ஹானிமனும் ''ஆம்'' என்றார். அப்போது அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் சொன்னார்கள் "இந்தக் குளத்தில் உள்ள தண்ணீரைக் குடித்துக் காய்ச்சல் வந்தாலும் சரி, வெறுமனே எங்களுக்குக் காய்ச்சல் வந்தாலும், அந்தக் குளக்கரை ஓரத்தில் உள்ள மரப்பட்டையை எடுத்துக் கசாயம் செய்து குடிப்பது எங்கள் வழக்கம். காய்ச்சலும் சரியாகிவிடும்" என்றார்கள்.

மருத்துவர் ஹானிமனும் அவ்வாறே செய்ய காய்ச்சல் சரியாகிவிட்டது. அதன் பின்னர் மருத்துவர் ஹானிமன் அந்தக் கிராமத்தில் உள்ள அத்தனை குளங்களில் உள்ள தண்ணீரையும் குடித்துப் பார்க்க காய்ச்சல் வரவில்லை. அவரது மருத்துவ மூளைக்கு எட்டியது. அவ்வளவு தான். அப்போது ஒரு முடிவுக்கு வருகிறார். இந்தக் காய்ச்சல் கிருமிப் பரவலால் அல்ல. கிருமிப் பரவல் இருந்தால் எல்லா குளத்துத் தண்ணீருக்கும் இந்தக் காய்ச்சல் உண்டாக்கும் தன்மை இருந்திருக்கும் அல்லவா? என்று கண்டு பிடித்தார்.

மருத்துவர் ஹானிமன் அந்தக் குளத்தை ஆராய்ச்சி செய்ய அதனுள் இந்தக் கரையில் இருந்த மரத்தின் வேர்கள் இறங்கி, மரத்தின் வேர்களினால் மரத்தின் சத்து குளத்துத் தண்ணீரில் இறங்கி குளத்துத் தண்ணீர் லேசான நிறமாற்றமும் அடைந்துள்ளதைக் கண்டுபிடித்தார். அந்த மரம் மலேரியா காய்ச்சலுக்கு கொடுக்கப்படும் மருந்தான கொய்னைன் என்னும் மருந்தை தயாரிக்கப் பயன்படும் மரமான சின்கோனா மரம் என்பதையும் கண்டுபிடித்தார்.

அந்த மரத்தின் பட்டையை கசாயம் செய்து தண்ணீர் குடிப்பதைப் போல் குடித்தார். அது உடனே காய்ச்சலை உண்டாக்கியது. கொஞ்சமாகக் குடித்தார் காய்ச்சல் தீர்ந்தது. அப்போதுதான் அவர் ஒரு முக்கிய விடயத்தைக் கவனித்தார். ஒரு அடிப்படையைக் கண்டுபிடித்தார். எது எதனை உண்டாக்குமோ அதுவே அதனைத் தீர்க்கும் (similia similibus curantur:- Definition: The homeopathic concept expressing the law of similar (literally, "likes are cured by likes"), the doctrine that any drug capable of producing morbid symptoms in the healthy will remove similar symptoms occurring as an expression of disease. Another reading of the concept, employed by Hahnemann, the founder of homeopathy, is similia similibus curentur, "let likes be cured by likes.")



**Premi. S**
Natural Medicine Practitioner ©
647.278.3100

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

NO MEDICAL INSURANCE
No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!
Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.
• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்
KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.
Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com
La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# சர்க்கரை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று கண்டுபிடித்தார். இது சித்த மருத்துவத்தின் பல தத்துவங்களில் ஒன்றுதான். மரணத்தை உண்டாக்கும் விஷங்களை மருந்தாக்கி மரணத்தையும் வெல்லலாம் என்ற சித்த மருத்துவ தத்துவம் தான் அது. இதுபோன்ற ஆராய்ச்சிகள் தான் இயற்கை சார்ந்த அறிவு. இதைப் பெற்றால்தான் எந்த மருத்துவ முறைகளிலும் வெல்ல முடியும்.

மேலும் ஹோமியோபதி பற்றி அறிய இந்த இணைப்புக்களையும் பாருங்கள்.
http://innominatesociety.com/Articles/Homepathy%20Similia%20Similibus%20Curentur.htm
http://neiah.nic.in/homeopathy.html
இதேபோலவே தான் அலோபதி மருத்துவர்களாக மருத்துவத்தை துவக்கிய உயர் திரு. சித்திக் ஜமால் அவர்களும், பஸ்லூர் ரஹ்மான் அவர்களும், பின்னாளில் ஹோமியோபதி, அக்குபஞ்சர், சித்தா ஆகிய விடயங்களில் விற்பன்னராக மாறிய பின்னர் கடைசியில் பெரிய குர்-ஆன் வாசகங்களிலேயே குணம் அளிக்கும் வழி வகைகளைக் கண்டறிந்தார்கள். பல அக்குபஞ்சர் மருத்துவர்களையும், ஹோமியோபதி மருத்துவர்களையும், பல ஹீலர்களையும் உருவாக்கிய பெருமை இவர்களுடையது.

திரு. பஸ்லூர் ரஹ்மான் அவர்கள் எழுதிய புத்தகத்தில் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் schedule - J ன்படி மருத்துவ தொழிலில் பல மருத்துவர்கள் சொல்லிவரும் Specialist என்று சொல்லும் பல துறைகளுக்கு மாற்று மருத்துவர்கள் வைத்தியமே செய்ய முடியாது என்று விளக்கியுள்ளார். ஒரு மாற்று மருத்துவராக இருந்தாலும், அவர் வாயாலேயே மாற்று மருந்துகளின் கொடூரத் தன்மையை மிகச் சிறப்பாக விளக்கி உள்ளார். இது அவரது மேன்மைத் தன்மையைக் காட்டுகிறது. மக்கள் இந்த மாற்று மருத்துவ முறையில் மாட்டிக் கொண்டு படும் அவஸ்தையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அவரது கருணை தெரிகிறது.

இதில் கடும் பக்க விளைவுகளுள்ள, எந்த வியாதியையும் குணமாக்க திறனற்ற மாற்று மருந்துகளை எந்தக் கேள்வியும் கேட்காமலும், எவ்வளவு விலை இருந்தாலும் வாங்கிச் சாப்பிடுவர். மக்கள், சித்த மருந்துகளைப் பற்றி பேசும்போது சித்த மருந்துகளுக்கு பக்க விளைவுகள் உண்டா? இல்லையா? என்று கேள்விகளை கேட்கின்றனர்.

இந்தக் கட்டுரையை இங்கே கொடுக்க இன்னும் ஒரு காரணமும் உண்டு. எந்த வியாதியையும் குணமாக்க திறனற்ற மாற்று விஷமுள்ள மருந்துகளை சாப்பிடுவதே, கல்லீரல், மண்ணீரல், வயிறு இவற்றின் சக்தி குறைந்து சர்க்கரை நோயை உருவாகிறது. எம்மிடம் மருந்துகள் கேட்பவர்கள் மாற்று மருந்துகளை சாப்பிட்டுக் கொண்டே சித்த மருந்துகள் எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்கின்றனர். உடம்பை கெடுத்துக் கொண்டே, உடலை சரி செய்யலாமா என்று கேட்பதை ஒத்ததே இது.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

முகவர்களிடம் பெறுவது நல்லது. வீடு வாங்குவதற்கான பத்திரத்தில் ஒப்பமிட முன்பு தகுந்த, தரமான, நம்பிக்கையான, உங்களின் நம்பிக்கைகுரியவரினால் அறிமுகப்படுத்திய (Referral) ஒருவரிடம் அடமானக்கடன் பெறுவதற்கு வேண்டிய எல்லாத் தகவல்களையும் பெற்ற பின்பு அந்த ஒப்பந்தத்தில் ஒப்பம் இட்டீர்களாயின் மன உளைச்சலைத் தவிர்ப்பதுடன், இழக்கும் பணத்தையும் தவிர்க்கலாம்.

எமது சமுதாயத்தில் அதிகமான நம்பிக்கையான முகவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு பிடிப்பது உங்களின் மிக முக்கிய கடமை.

குறிப்பு - மேலதிகமான அடுக்குமாடி மனைகள் கட்டப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. அனேகமான (79%ஆன) மனை கட்டுபவர்கள் 70% இற்கும் மேற்பட்ட அலகுகள் விற்கப்பட்ட பிற்பாடே கட்டிடத்தைக் கட்டத் தொடங்குகின்றார்கள். இதனால் எதிர்காலத்தில் பெரிதான பாதிப்புகள் வராது என CMHC அறிவித்துள்ளது.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 43,860 வீடு, மனைகள் 2016 இன் முதல் கால்பகுதியில் கட்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. ஏறக்குறைய 6% ஆனவை கட்டப்பட்டு முடிந்தபின்பும் விற்கப்படலாம். மற்றவை விற்கப்பட்டு விட்டன.

1980களின் இறுதியிலும், அதிகமான வீடு, மனைகள் கட்டப்பட்ட நிலைமை ஏற்பட்டு ஆதனச்சந்தையின் விலையில் மிகப்பெரிய



இறக்கம் ஏற்பட்டதனை சிலர் அறிந்திருப்பீர்கள். ஆனால் CMHC இன் அறிக்கையின் பிரகாரம் இன்றைய நிலை 1980 இன் இறுதிப் பகுதியில் உள்ளது போல் இல்லை என்பதனையும் கூறுகின்றது. எது எவ்வாறாயினும் நாம் வாங்கும்போது நிதானத்துடனும், சரியான கணித்தலுடனும் வாங்குவது சிறந்தது.

# அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஜனநாயக்கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக முதன்முறையாக ஒரு பெண்மணியைத் தெரிவு செய்ததன் மூலம் சரித்திரம் படைத்து விட்டது. Bernie Sanders தனது ஆதரவை முற்று முழுதாக Hillary Clinton இற்கு வழங்குவதாக உறுதி அளித்தாலும் அவரின் ஆதரவாளர்களில் ஒருசிலர் அவரின் அறிவுரையை ஏற்கத் தயாரில்லை எனத் தெரிவித்துள்ளனர்.



## பொதுத்தேர்தல்

இரண்டு கட்சிகளினதும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் ஆரம்பமாகி விட்டது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

**தற்போது இருக்கும் முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு**

ஜனநாயக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

# வாழ வழி வகுத்திடு

கதியென எண்ணிக் களைத்து விடாதே
விதியென எண்ணி வீணாய் இராதே
மதியும் சேர்ந்து மனமும் இருக்கச்
சதியெதும் இல்லை சாதி நினைத்ததை

மோகம் வளர்த்திடு மொழியில் வளர்த்திடு
தாகம் தீர்த்திடு தமிழில் தீர்த்திடு
சோகம் வந்திடில் சோர்வை அழித்திடு
சாகமுன் முடிந்ததைத் தரணியில் செய்திடு!

வேற்றுமை வித்தில் வேதனை வளர
ஏற்றம் வருமோ எங்கள் வாழ்விலே
கூற்றுவன் வரும்வரை குற்றம் புரிந்திட
போற்றும் சொர்க்கம் போக முடியாதே

தேனாய்ப் பேசியும் சிரித்துப் பேசியும்
வீணாய்ப் போகுதே நேரம் பேச்சில்
காணா திருப்பின் கணிசமாய் உண்மைகள்
நாணயம் வாழ்வில் நமக்கு நன்றே

- Dr. தில்லைநாதன் சிவகுமாரன் -

எம்மொழி தினமும் பேசி வருகையில்
செம்மொழி என்றும் செத்து விடுமோ?
நம்மொழி தழைக்கும் நாட்டில் நன்றே
நம்பிக்கை இருக்க நம்மில் நிலைத்தே

சோதனை கிடைத்தது இதுவரை போதுமே
சேதம் தேவையோ பேதமை பேசியே
போதனை கேட்டது இதுவரை காணுமே
சாதனை செய்வோம் சகலரும் சேர்ந்தே



எங்கும் வாழ்வோம் இன்பமாய் எண்ணிடில்
தங்கும் காலம் சிலவெனத் தரணியிலே
பொங்கும் கோபமும் பொறாமையும் போக்கிப்
பங்கமில் வாழ்க்கை பாரில் நடத்தவே
சீரோ டிருந்து சிறப்பாய் வாழ்வோம்
ஊரோடு பகைத்து வேரோடு கெடோம்
பாரில் மக்கள் பொதுநலன் பேணுவோம்
வேறவர் என்று வேற்றுமை காட்டோம்!


## பருத்தித்துறை மக்கள் ஒன்றியம் நடத்தும் வருடாந்த கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும்

காலம்: சனிக்கிழமை, 06, ஆவணி 2016 நேரம்: காலை 10 மணி தொடக்கம்
இடம்: Milliken Park – Area 'B' Intersection: McCowan and Steeles
சிறுவர்கள் பெரியவர்கட்கான விளையாட்டுப்போட்டிகளுடன் அறுசுவை உணவும் உண்டு.

பருத்தித்துறை மக்கள், அயலவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

மணியம் மாஸ்ரர்: 905-294-6754 / 647-830-9321
பாலேஸ்வரன்: 416-358-6853 அருள்ராஜன்: 647-280-4808

# வீடுகளில் கழிவு நீர் குழாயுடனான மழைநீர் குழாயின் தொடர்புகளைத் துண்டியுங்கள்!

## கனேடிய தகவல் தொடர் 254

### Mandatory downspout Disconnection

இது நகரசபையின் ஓர் எச்சரிக்கை!

மேலே குறிப்பிடப்பட்ட தலைப்பில் ஓர் எச்சரிக்கைப் பிரசுரம் ரொறொன்ரோ மாநகரில் உள்ள சகல வீடுகளுக்கும் கடந்த மாதம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

உங்கள் வீடுகளின் கூரைகளில் உள்ள பனி உருகி வழிந்தோடும் நீர் (Snow Melted Water) மற்றும் பாரிய மழைக்கால நீர் (Storm Water) ஆகியவற்றின் வெளியேற்றத்திற்காக நீர் குழாய்கள் வீடுகளின் வெளிச் சுவர்களில் பொருத்தப்பட்டிருக்கும். அனேகமான பழைய வீடுகளில் இந்நீர்க் குழாய்கள் நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் நகரசபையின் கழிவு நீர் குழாய்களுடன் (City sewage system) மழைநீர் வெளியே சிதறவிடாது போய்ச் சேர்வதற்காகத் தொடுக்கப்பட்டிருக்கும்.

**'இந்த தொடர்பினை துண்டிப்பதற்கு' இவ்வருடம் டிசம்பர் 31, 2016 கடைசி நாள்.**

இதன் பின்னரும் துண்டிக்காதவர்களுக்கு நகரசபை தண்டனை ரிக்கற் வழங்கும் என்ற எச்சரிக்கையே வழங்கப்பட்டு வருகின்றது.

மார்க்கம் நகரின் சட்டப்பிரிவு (City of



Markham by law 2014 - 7) இதனை ஏற்கனவே வலியுறுத்துகின்றது. மிசுசாகா நகரில் இதனை துண்டிக்காது நகரசபை பரிசோதகரின் கண்ணில் அகப்பட்ட சில வீடுகளுக்கு தண்டனை ரிக்கற் வழங்கியதாக செய்திகள் வந்துள்ளன. ரொறொன்ரோ நகரசபை இந்தத் தொடர்பினை துண்டியுங்கள் என்ற எச்சரிக்கையினை தற்போது வழங்கி கொண்டு வருகின்றனர். இதனை ஒரு சட்டமாக உருவாக்கி எதற்காகத் துண்டிக்கச் சொல்கிறார்கள் என்பதும் நகரசபையின் இணையத்தள செய்திப் பிரிவுகளிலும், ஒவ்வொரு வீடுகளுக்கும் அனுப்பப்பட்ட எச்சரிக்கை நோட்டீஸ்களிலும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். வீடுகளில் கழிவறை நீர், சமையல் அறை நீர் யாவும் நிலத்தின் கீழ் ஒழுங்காக உருவாக்கப்பட்ட நகரசபையின் குழாய்களினூடாக (City sanitary sewer system) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (Wastewater treatment plants) எடுத்துச் செல்லப்பட்டு பல கட்டங்களாக வடிகட்டப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு இறுதியில் கடல்நீரேரியில் கலக்கப்படுகின்றது.

கழிவு நீர்களின் சுத்திகரிப்பு என்பது பின்வரும் நான்கு கட்டங்களில் நவீன தொழில் நுட்பங்களினூடாக சுத்திகரிக்கப்பட்டு நீர் பரிசோதனைகளினூடாக பின்பு நீரேரிகளை சென்று அடைகின்றன.

1. அடிப்படை வடிகட்டல் Preliminary treatment
2. ஆரம்ப சுத்திகரிப்பு Primary treatment
3. இரண்டாம் தர சுத்திகரிப்பு Secondary treatment
4. இறுதிச் சுத்திகரிப்பு Final treatment

நான்கு கட்டங்களைக் கடந்து இறுதியாகக் கடைசிச் சுத்திகரிப்பில் 'குளோரபோம்' (Chloroform) என்னும் இரசாயனக் கலவையின் அளவை நிபுணர்கள் பரிசோதித்த பின் நீரேரியில் கலக்கப் படுகின்றது.

ரொறொன்ரோ நகரில் மட்டும் நீரேரிக்கு அருகில் பின்வரும் நான்கு பெயர்களில் வெவ்வேறு இடங்களில் இந்தக் கழிவு நீர் சுத்திகரிப்பு தொழில் கூடங்கள் இயங்கி வருகின்றது.

1. Highland Creek Wastewater Tretatment Plant 51, Beechgrove Drive, Scarborough
2. Humber Wastewater Treatment Plant Toronot West
3. The Queensway & Humber River நீரேரிக்கு அருகில் உள்ளது
4. Ashbridges Bay Wastewater Treatment Plant, 09, Leslie St., Toronto
5. North Toronto Wastewater Treatment Plant, 21, Redway Rd., Toronto

இங்கு வீடுகளின் கூரைகளிலிருந்து வழிந்தோடும் மழை நீரும் சேர்ந்து வீடுகளில் இருந்து வரும் கழிவு நீர் குழாய்களினூடாக சுத்திகரிப்புத் தொழிற்சாலையினை அடையும்போது அங்கு நீரின் மட்டம் கூடுவதால் பூரணமான சுத்திகரிப்புத் தடைப்படுகின்றது. இதனால் கடல்நீரேரியும் பூரணமாக சுத்திகரிக்கப்படாத தண்ணீரினால் மாசுபடலாம் என்பது நகரசபையின் ஓர் எச்சரிக்கை ஆகும்.

இவை தவிர இங்கு இன்னுமோர் ஆபத்து அனேகமாக நடக்கச் சாத்தியமாகலாம் என்றும் எச்சரிக்கப்படுகின்றது. பாரிய மழைக் காலங்களில் நகரசபையின் கழிவு நீர்க்குழாய் அளவுக்கு அதிகமாக நிரம்புவதால் அது பின்னோக்கி இழுத்துப் பலரின் வீட்டு நிலக்கீழ் அறைகள் கழிவு நீரால் நிரம்பி வீட்டினையே பழுதாக்கிய சம்பவங்கள் பல வீடுகளில் நடந்துள்ளது. (Basement Flooding) என்ன காரணம்?

கழிவு நீர் குழாய்களுடன் மழைநீர் குழாயும் தொடுக்கப்பட்டிருப்பதே இதற்கு முக்கிய காரணம். மழைநீர் குழாயினை துண்டித்து விட்டால் இப்படியான பிரச்சினைகள் உருவாகாது.

அதே மழை நீரை வீடுகளின் மரங்கள், புல் தரைகள், பூங்கன்றுகளுக்குத் திருப்பி விடலாம். சில வீடுகளில் அந்த நீரினை வீட்டுக்கு வெளியே பாரிய கொள்கலன்களில் சேமித்து வைத்து உபயோகிப்பவர்களும் உண்டு. மழைநீரால் ஆபத்துகள் உருவாகும் நிலையிலிருந்து தவிர்த்து அதனை சரியாக நிர்வகிக்கலாம் என்று நகரசபை வலியுறுத்துகின்றது.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)

## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

சென்ற தடவை மின்காந்த அலைகளின் சக்திகளின் அலை வரிசைப் பார்த்தோம் அதன் தொடர்ச்சியை இன்றும் பார்க்கப் போகின்றோம். வானொலி அலைகளில் இருந்து காமா அலைகள் வரையில் காணப் படும் மின்காந்த அலைகளின் ஒழுங்கு வரிசையை ஒரு தடவை நினைவு படுத்திப் பாருங்கள். ஒருவேளை மறந்திருந்தால் சென்ற தடவை வந்த இதழைப் புரட்டிப் பாருங்கள். அந்த அலை வரிசையில் மூன்று சிறப்பான இயல்பு களைக் காணலாம். 1) அலைநீளங்கள் குறைந்து கொண்டு செல்கின்றன. 2) அதிர்வெண்கள் உயர்ந்து கொண்டு செல்கின்றன. 3) அலைகள் கொண்டுள்ள சக்தியின் அளவும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

இனி, ஒலியலைகளையும் ஒளியலைகளை யும் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஒலியலைகள் நீள்பக்க அலைகளாகவும் ஒளியலைகள் குறுக்கலைகளாகவும் இருப்பினும், ஒரு வகையில் இரண்டும் ஒரே தன்மையவை எனலாம். ஒலியினைப் பொறுத்தவரையில் (சத்தம்) எங்களால் 20 ஹேட்சிற்கும், 20,000 ஹேட்சிற்கும் இடையிலான அதிர் வெண் வரிசைகளையே கேட்க முடியும். ஹேட்ஸ் என்றால் என்ன எனக் கேட்கின்றீர் களா? அது வேறொன்றுமில்லை, அதிர் வெண்களை அளக்கின்ற அலகு. இவற்றிற்கு மேலேயும் கீழேயுமான அதிர் வெண்களையுடைய ஒலியலைகள் உண்டு. அவற்றினை எங்களால் உணர்ந்து கொள்ள முடியாது. வேறு உயிரினங்கள் அந்தச் சத்தங்களை கேக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, நாய் கள் 20,000 ஹேட்ஸ்சிற்கும் அதிகமான அதிர்வெண்கள் கொண்ட சத்தங்களைக் கேட்கும் வல்லமை கொண்டவை என்கிறார் கள். அச்சத்தங்களைக் கேட்டுத்தான் அவை ஊளையிடுகின்றன என்பது கிட்டத் தட்ட எல்லோருமே அறிந்த உண்மை யாகும்.

சத்தத்தினைப் போலவே வெளிச்சத்திலும் சிவப்பிற்கும், ஊதாவுக்கும் இடையிலான அதிர்வெண் கொண்ட வெளிச்சத்தினையே எங்களாற் பார்க்க முடிகிறது. சிவப்பிற்கும், ஊதாவுக்கும் வெளியில் உள்ள வெளிச்ச அலைகளை எமது சாதாரண கண்களினால் பார்த்து அறிய முடியாது. மின்காந்த அலைகளின் எல்லாப் பிரிவுகளுமே எமது சாதாரண வெளிச்சத்தின் விரிவுபடுத்தப் பட்ட வகைகள்தான். அவற்றின் சக்தி வரையறைகளின் வித்தியாசத்தால் நாமவற்றை எமது கண்களின் புலன்களால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. இந்நாட்களின் உயர் தொழில்நுட்பம் இவற்றில் சிலவற்றினை பழக்கிக் கொள்ளும் வல்லமையைத் தந்திருக்கின்றன. வெளிச்சம் போட்டுக் காட்டும் வெளிச்சத் தினையே வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் அறிவியலாளர்களின் முயற்சியில், ஒளி யானது அலைவடிவில் செக்கனுக்கு 300,000 கிலோமீற்றர் வேகத்தில் செல்வது கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நியூட்டன் காட்டிய ஒளியின் துகள் போன்ற இயக்கத்திற்கான விளக்கங்கள் இன்னமும் அலைவடிவ இயக்கதால் விளங்கப்படுத் தப்பட இல்லை. ஆனாலும் ஒளியென்பது அலைதான் என்பது இப்போது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. இன்னமும் ஒருசில தெளிவுகள் மட்டும் பெற்றாற் போதும்.

இந்நிலையில் அறிவியலாளர்கள் மாக்ஸ்வெலின் மின்காந்த அலைகளின் இயல்புகளையும் செம்மைப் பொறிமுறை யில் சேர்த்துக் கொண்டார்கள். மின்காந்த அலைகளும் அதாவது ஒளியலைகளும் செம்மைப் பொறிமுறை கூறியது போலவே அலைக- ளின் இயல்புப்படி சக்தியைத் தொடர்ச்சி யாகக் காவிக் கொண்டு வருகின்றன என்ற முடிவும் எடுக்கப்பட்டுவிட்டது.

வெளிச்சத்தின் விடயங்கள் இப்படியாக மாற்றமடைந்து கொண்டு இருக்க, இன்னொரு புதிய சிக்கல் ஆய்வாளர்களின் மண்டையைப் பிடித்து உலுப்பிக் கொண்டு இருந்தது. அதற்குக் கரும்பொருட் கதிர் வீசற் சிக்கல் எனவும் பெயரிட்டுக் கொண்டார்கள். இயற்பியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்த கரும்பொருட் கதிர்வீச்சுச் சிக்கலை விளங்கிக் கொள்வ தற்கு முதலில் கரும்பொருள் என்றால் என்ன? அதன் கதிர்வீச்சு என்றால் என்ன? எனத் தெரிந்து கொள்வோம். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்பியல் வாதிகளுக்கு கரும்பொருட் சிக்கல் அதிட்ட வசமாகக் கிட்டியது எனலாம். எங்களது இதுவரை விரிவுபடுத்திய வெளிச்சத்தின் அறிவுடன் இணைந்த அதனையும் தெரிந்து கொள்வோம்.

பொருட்கள் ஏன் கருமையாகத் தெரிகின் றன? பதில் இலகுவானது. அப்பொருள் இருந்து எந்தவொரு, வெளிச்சமும் எமது கண்களுக்கு வருவதில்லை. கதிரவ ஒளியி ல் கறுப்புப் பொருட்களையும் வெண்ணிறப் பொருட்களையும் வைக்கும் போது கறுப்புப் பொருட்கள் அதிக சூடாக இருப்பதை நாங்கள் அனுபவத்தில் கண்டறிந்துள் ளோம். கதிரவனில் இருந்து சக்தியைக் காவிக் கொண்டு ஒளியலைகள் அதாவது மின்காந்த அலைகள் பல்வேறு வடிவில் வருகின்றன. எமது புவியைச் சூழவுள்ள பாதுகாப்புக் கவசங்களால் எக்ஸ் கதிர்கள், புறவூதாக் கதிர்கள் போன்ற சக்திவாய்ந்த கதிர்கள் புவிக்கு வருவது தடுத்துவிடப்பட, கட்புல ஒளியும், அதன் கீழான சக்தியைக் கொண்ட கதிர்களுமே புவியினை வந்தடை- கின்றன.

கறுப்புப் பொருட்கள் பொரும்பாலும் கதிரவனில் இருந்து வந்து விழுகின்ற எல்லாக் கதிர்களையும் உறிஞ்சி விடுகின்றன. அதனால் அவை அதிகளவு சக்தியைப் பெற்றுச் சூடாகின்றன. அத்தோடு கறுப்பாகவும் தெரிகின்றன. ஆனால் வெண்மையான பொருட்களோ கரும்பொருட்கள் போன்று முழுமையாக கதிரவ வெளிச்சத்தை உறிஞ்சுவதில்லை. பெருமளவு கதிர்களைத் தெறிப்படையச் செய்கின்றன. அதனால்தான் அவை வெண்ணிறமாகவும் வெய்யிலில் இருக்கும் கறுப்புப் பொருட்களை விடச் சூடு குறைந்தவையாகவும் இருக்கின்றன.

இதனால்தான் கிரிக்கட் விளையாடுபவர்கள் பொதுவாக வெள்ளைநிற ஆடைகளை அணிகிறார்கள். கறுப்புநிற ஆடைகளோ அல்லது கடும் நிறத்திலான ஆடைகளோ அணிவதில்லை. இந்நாட்களில் பிரித்துக் காட்டல், அழகு என்பவற்றுடன் மின்னொளி யிலும் கிரிக்கட் விளையாடப்படுவதால் கடுமையான நிற உடைகளையும் அணிகிறார்கள்.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கறுப்புப் பொருட்கள் தம்மீது விழுகின்ற எல்லா ஒளியையும் கிட்டத்தட்ட உறிஞ்சி விடுவது போன்று, தம்மீது விழுகின்ற எல்லா மின்காந்த அலைகளையும் முற்றா கவே உறிஞ்சக் கூடிய பொருட்களும் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதினார் கள். அவ்வகையான பொருட்களை முழுமைக் கரும்பொருட்கள் என்றார்கள். இந்த முழுமைக் கரும்பொருள்களுக்கு இன்னொரு சிறப்பான தன்மையும் உண்டு. எல்லா அதிர்வெண்களையும் உடைய கதிர்களையும் சூழலுக்கு வீசக் கூடியவை. இப்படியான கரும்பொருள் ஒன்று சூழலுக்கு வீசுகின்ற கதிர்வீச்சினையே கரும்பொருட் கதிர்வீச்சு என்கிறார்கள்.

ஆக, எல்லாக் கதிர்களையும் உறிஞ்சக் கூடியதும், எல்லாக் கதிர்களையும் வெளி வீசக் கூடியதுமான பொருளை முழுமைக் கரும்பொருள் எனக் கூறினார்கள், பேரண்டத்திலேயே எந்தவொரு முழுமைக் கரும்பொருளும் இல்லை. இதுவரையிற் கண்டுபிடிக்கப்படவுமில்லை. ஆனால் கிட்டத்தட்ட முழுமைக் கரும்பொருள் போன்ற பொருட்கள் சிலவும் உள்ளன. ஓரளவுக்கு கரும்பொருளாகப் பொருந்தக் கூடியதான பொருள் ஒன்றினை ஆய்வாளர் கள் ஆய்வுகூடங்களில் உருவாக்கினார்கள். உட்புறமும் வெளிப்புறமும் கருமையாக்கப் பட்ட, உள்ளே வெற்றிடமான ஒரு மூடிய பெட்டியை எடுத்து அதில் ஒரு சிறிய துவாரத்தினை இட்டு அதனை கிட்டத்தட்ட ஒரு முழுமைக் கரும் பொருளாகப் பாவித்தார்கள். இந்தக் கரும்பொருளில் செய்த ஆய்வுகள்தான் சிக்கலைத் தந்தன.

என்ன சிக்கல் எனக் கேட்கின்றீர்களா? அடுத்த தடவையில் ஆறுதலாகப் பார்ப்போம்.. சரிதானே!

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca





# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

- A private math institute -

"Teaching Experience in Math for more than 23 years"

# Gr.11 & Gr.12 Students, score 90's & above

in the 2016-2017 school year

## Guaranteed Marks based on our previous records

*"Our Target is 90% and above"*

- *An effective study plan and targeted practice sessions delivers stunning results*
- *Entire Ontario Math Curriculum for relevant grade will be covered*
- *Appropriate additional content included for knowlwdege enhancement*
- *Focus on concepts comprehension and problems solving methodologies*
- *Knowledge application, thinking and inquiry development for word problem solutions*
- *No more cramming the night before a test and hoping for the best, we will help you prepare the best and keep you on top of the rest of your class*
- *23+ years of time tested, success proven coaching approach is only a phone call away*

## Our Program for school year 2016-17

| Grade | Program | Description |
|---|---|---|
| Grade 7: | new G7-500 | A genius math program designed for students currently in Gr-7. This program will allow students to apply for the IB, Enriched or TOPS math program in high school (or any other specialized math program) |
| Grade 8: | G8-400 | The most intelligent engineering math program prepared from Gr 8. The first batch, G8-400, started in May 2015 and has shown outstanding progress. |
| Grade 9: | G9-300 | Teaching & learning at Gr. 10 level |
| Grade 10: ★ | G10-200 | Prepare them for Gr.11 while scoring high in Gr. 10 |
| Grade 11: ★ | G11-100 | Gr. 12 foundation to be built while scoring high in Gr. 11 |
| Grade 12: | G12-ADCL | The best program for learning in advance. A complete course to achevie 90's & higher. |

★ In order to achieve the highest marks possible in Gr. 12, a good foundation is needed in Gr. 10 & 11

**Class Starts**
- **Group 1** Learn on an advanced level: Starts first week of August
- **Group 2** Regular Program for all grades: Starts first week of September

*"Limited Space"* **Meeting must be held before the class starts, Call to make an appointment**

**@ 416 666 5515** | *61 SNOWY OWL WAY SCARBOROUGH ON Markham/McNicoll*


TITLE SPONSOR
sun sonic
Connecting you to yours...
ஆதரவில் கனேடியத் தமிழர்களின்
நட்சத்திர விழா 2016
POWERED BY
SkyRoute
TRAVEL SERVICES INC.
ஆகஸ்ட் 6,7 சனி, ஞாயிறு நாட்களில்
MARKHAM FAIR GROUNDS 10801 McCowan Road, Markham, Ontario
மக்கள் மனங்கவரும் பல்வேறு நிகழ்ச்சிகளோடு
கனேடிய தமிழ்க் கலைஞர்களும், தமிழகக் கலைஞர்களும்
சங்கமிக்கும் மாபெரும் இசைச் சங்கமம்
நுழைவுக் கட்டணம் $ 5 மட்டுமே
PLATINUM SPONSORS
ASIYANS
WWW.ASIYANS.CA
Cash Point
The Buck Starts Here!
Tel. 416 284 7900
SKL
CANADA INC.
SILVER SPONSORS
747 AUTOPARTS
NJ Insurance
DON VALLEY NORTH
TOYOTA
BRONZE SPONSORS
INFORCE LIFE
Financial Services Inc.
J.R.B
Allstate
Dr SABESAN
THANGATHURAI
Abi Singam
GOLD SPONSORS
FRIENDLY
TRUCK DRIVING SCHOOL
Driving Towards Success
Thermo Care
Heating Cooling Inc.
Call 416 835 9373
AVIS
CAR RENTAL
Call 416 882 5599
Amma Pawn Broker
Call 416 757 0034
COMPUTEK
COLLEGE
AVR AUTO
COLLISSION LTD
Call 416 640 2991
MEDIA PARTNERS
tvi

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# குதில்கால், கணுக்கால் வலிகள் மறைய!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Heal, Ankle Pain

**'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி.** இந்த பழமொழியின் பொருளை நோயின் பாதிப்பால் தினமும் மருந்து மாத்திரைகளுடன் அவதிப்படு பவர்கள் நன்கு உணர்வார்கள். எண்ண முடியாத நரம்புகள், எலும்புகள், தசைகள் போன்றவற்றால் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒன்றுதான் மனித உடல். இந்த உடலை தாங்கி நிற்கும் தூண்கள் தான் கால்கள். காலை முதல் மாலைவரை ஓயாமல் நடப்பவர்களுக்கும் தினமும் நின்றபடி வேலை செய்பவர்களுக்கும் இரவில்



குதிக்காலிலோ, கணுக்காலிலோ வலி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இந்த குதிக்கால் வலியானது கீழ்முது கெலும்பு பகுதி, இடுப்பு என அனைத்துப் பகுதிக்கும் பரவி இரவில் தூக்கத்தையும் கெடுத்து காலையில் எழுந்து நிற்கவும், நடக்கவும் மிகுந்த சிரமத்தை உண்டு பண்ணுகின்றது.

இவ்வாறான வலிகள் எவ்வாறு உண்டா கின்றது, அதனை எவ்வாறு சரி செய்வது என்பது பற்றி தெரிந்து கொள்வோம்.

கணுக்கால் என்பது (Ankle) பாதத்திற்கு மேல் உள்ள பகுதியாகும். இந்தக் கணுக்கால் பகுதிதான் மனித உடலை முழுமையாகத் தாங்கி நிற்கிறது. இந்தக் கணுக்கால் வலி ஆண்களை விட பெண்களையே அதிகம் பாதிக்கிறது. அவரவர் உடற்கூறுக்குத் தகுந்தபடி வாதநீரானது பித்த நீருடன் கலந்து குதிக்கால்களின் இருபுறமும், கணுக்கால் களிலும் உறைந்து கொள்கிறது. குறிப்பாக இரவில்தான் இந்த நீரானது இப்பகுதியில் சேர்ந்து விடுகிறது. இத்துடன் உப்பு நீரும் சர்க்கரையும் சேர்வதால் பாதத்தில் சிறு கட்டிகள் உருவாகின்றன. இதனால் காலையில் எழுந்ததும் வலி அதிகமா கின்றது. பாதத்தில் எப்போதும் ஒருவித எரிச்சல் இருந்து கொண்டேயிருக்கும்.

### வலிக்கான காரணங்கள்

இரவு நேரங்களில் அதிக குளிர்ச்சியுடைய பானங்கள் உணவுகளை அருந்துவதாலும் உடலில் செரியாமை கோளாறு ஏற்பட்டு இரைப்பையில் அமிலங்கள் அதிகமாக சுரந்து கணுக்கால் வலிக்கு முக்கிய காரணமாகி விடுகிறது. இதுபோல் கபநீரானது வாத, பித்த நீருடனும் உப்பு நீருடனும் சேர்வதால் மலச்சிக்கலை உருவாக்குகின்றது. இதனால் வாயு சீற்றம் கொண்டு வாதமாக மாறுகிறது. இதுதான் குதி மற்றும் கணுக்கால்களின் வலியை ஏற்படுத்துகிறது. அதுபோல் பகல் தூக்கம், இரவில் தூக்கமின்மை அதிக எடை போன்றவற்றாலும் குதிக்கால், கணுக்கால் வலிகள் ஏற்படுவதுண்டு.

### வலி ஏற்படுவதை தடுக்க!

அதிக காரமான உணவுகளைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக காரமான உணவுகளை இரவு நேரங்களில் உண்ணலாகாது. அத்துடன் எண்ணெய் பதார்த்தங்களை முடிந்தவரை உண்ணாமல் இருப்பது சிறந்தது. இரவு உணவு அளவோடு இருக்க வேண்டும். புளிப்புக் கலந்த உணவுகளைத் தவிர்த்து இரவு உணவை சூடாக சாப்பிடுவது நல்லது.

பகலில் அதிக நேர தூக்கம் உடலை பருமலடையச் செய்வதுடன் வாய்வை உருவாக்கி நரம்புகளில் நீர் கோர்த்து மூட்டு, கணுக்கால் பகுதிகளில் வலியை ஏற்படுத்தும். மலச்சிக்கல் வராது பார்ப்பதுடன் அதிக உணவு, நீண்ட நேர பட்டினி போன்றவற்றை தவிர்க்கவும்.

இரவில் அதிக நேரம் கண்விழித்துத் தொலைக்காட்சி பார்ப்பது, கம்யூட்டரில்



வேலை செய்வதைக் குறைக்க வேண்டும். உணவில் மிருகங்களின் கொழுப்பு நிறைந்த உணவை தவிர்த்து காய்கறிகள் கீரைகள், பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். குதிக்கால் உயரமுள்ள காலணிகளை அணிந்து நெடுந்தூரம் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### மருத்துவம்

குதிக்கால் மற்றும் கணுக்கால் வலிக்கு அறுவை சிகிச்சை மூலம் தீர்வை அடைய முடியாது. சித்த மருத்துவ முறையில் வெளிப்பூச்சு தைலங்கள், உட்கொள்ளும் மூலிகை மருந்துகள் மூலமாகக் குணப்படுத்தலாம்.

### தைலம் செய்முறை

கடுக்காய், சாதிக்காய், சுக்கு, வசம்பு, மஞ்சள் இவற்றை சம அளவு எடுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு தேவையான அளவு பொடியை எடுத்து சிறிதளவு நல்லெண்ணெயுடன் சேர்த்து கொதிக்க வைத்து குழம்பு பருவத்தில் வரும்போது இறக்கி ஆறவைத்து குதி மற்றும் கணுக்கால்களில் பூசி வந்தால் வலி மறையும்.

### மர்மப் புள்ளிகளை இயங்க வைத்தல் *(Pressure Points)*

குதி மற்றும் கணுக்கால்களிலுள்ள மர்மப் புள்ளிகளை சரவரிக் கண்டறிந்து அதனை பொருத்தமான அளவு விசை கொண்டு அழுத்தும்போது அதனுள்ளிலிருக்கும் கட்டிகள் குறைந்த, கரைந்து நாளடைவில் வலி நின்றுவிடும். அத்துடன் குறிப்பிட்ட யோகா பயிற்சி முறைகள் உள்ளன. அதனை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் சில நாட்கள் பழகி வர வலி ஏற்பட வாய்ப்பு இருக்காது.


ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

Nantha Aiyadurai, B.Eng

Relocation Services
Ottawa<<<<>>>>>GTA
கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது!
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Direct: 613-850-9931
Office: 613-288-1999
Web: www.nantha.ca
E-mail: nantha@coldwellbanker.ca
BUY. SELL. INVEST

# கற்கால தமிழர்கள்!

"எங்க ஊருல அல்லாருக்கும் முக்கிய தொழிலே விவசாயம்தாங்க. காடு, கழனின்னு வெளியுலகத்துக்கு தெரியாம இருந்த நாங்க இப்போ எல்லாத் திசையிலயும் பிரபலமாகிட்டோம். எங்க ஊரு சனங்கள்லாம் ரொம்ப பெருமைப்படுதுங்க. 30 ஆயிரம் வருசத்துக்கு முன்னாடியே நம்மூர்ல மனுசங்க வாழ்ந்துருக்காங்கடோய்னு ஊரு சனமெல்லாம் பூரிச்சுப் போயி இருக்குறாங்கங்க. நெதமும் ஆராய்ச்சி செய்யுற இடத்துக்குப் போயி இன்னக்கு என்ன புதுசா கண்டுபிடிச்சிருக்காங்கன்னு பாத்துட்டு வருவோம். அங்குள்ளவங்க எங்க கிட்ட நிறைய தகவல்களை சொல்லுவாங்க. ஒருசிலருக்கு புரியும் சிலருக்கு புரியாது. கேட்டுக்கிட்டு வந்திடுவோம். பத்து நாளக்கு முன்ன ஊர்ல இருக்குற கவர்மெண்ட் ஸ்கூல்ல எல்லா பொருட்களையும் பார்வைக்கு வெச்சாங்க. ஸ்கூல் பசங்கள்ள இருந்து ஊரு சனங்க வரைக்கும் ஒன்னா உக்காந்து பாத்தோம்." முகத்தில் பெருமை பொங்கப் பேசுகிறார் பட்டறைப் பெரும்புதூர் ஒன்றிய முன்னாள் கவுன்சிலர் கே. பாஸ்கரன்.

பட்டறைப் பெரும்புதூர், தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து 58 கிலோமீட்டர் தூரத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலை ஆற்றின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கிராமம். இந்த ஊரில் தற்போது நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சியில் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. மேலும், உலகம் முழுக்க அக்காலத் தமிழர்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளுக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் பனிக்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்களை, இந்திய தொல் பழங்காலத்தின் தந்தை என அறியப்படும் ராபர்ட் புரூஸ் பூட், ஏற்கெனவே கண்டுபிடித்துள்ளார். பூண்டிக்கு அருகே அள்ளிக்குழி என்ற மலைத்தொடரில் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகை ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இதுபோல் திருவள்ளூரைச் சுற்றிலும் பல இடங்களில் பல தொல்லியல் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கற்காலத்தில் முக்கியமான ஒரு பகுதியாக இந்தச் சுற்று வட்டாரப் பகுதி விளங்கியிருக்கிறது. இப்பகுதியில் மட்டுமே இதுவரையிலும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கற்கால வாழ்விடங்கள் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்நிலையில் இந்த ஆண்டு இந்தப் பகுதியில் ஆணைமேடு, நத்தமேடு, இருளந்தோப்பு ஆகிய மூன்று இடங்களில் தமிழகத் தொல்லியியல் துறையினரால் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக 12 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்த அகழாய்வில் இதுவரை கற்கால மனிதர்கள், இரும்புக்கால மனிதர்கள் மற்றும் சங்ககால தமிழர்கள் பயன்படுத்திய கற்கருவிகள், கருப்பு சிவப்பு மண்பாண்டங்கள், மெருகூட்டப்பட்ட மண்பாண்டங்கள், காவி வண்ணம் பூசப்பட்ட மண்பாண்டங்கள், வழவழப்பான மண்பாண்டங்கள், பாறை ஓவியங்களில் வரையக்கூடிய மண்பாண்டங்கள், கல்மணிகள், சுடுமண்ணாலான மணிகள், செம்புப்பொருட்கள், கண்ணாடி வளையல் துண்டுகள், கூம்பு வடிவ ஜாடிகள், யானை தந்தத்தினாலான



- சிவதாணு -

ஆபரணங்கள் ஆகியவையும் தமிழ்பிராமி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகளும் ரௌலட்டட் மண்பானைகளும் துளை கொண்ட கூரை ஓடுகளும் கிடைத்துள்ளன.

இதில் ஆச்சரியம் பழங்கற்காலம், இடைக் கற்காலம் மற்றும் புதிய கற்காலம் ஆகிய மூன்று பண்பாடுகளையும் கொண்ட கற்கருவிகளும் கற்கோடாரிகளும் இந்த ஊரில் ஒன்றாக கிடைத்திருப்பதுதான். மேலும் சுடுமண்ணாலான உறை கிணறுகள் தோண்டத் தோண்ட வந்துகொண்டே இருக்கிறது. தமிழகத்திலேயே மிக அதிக எண்ணிக்கையிலான உறை கிணறுகள் கிடைத்துள்ள அகழாய்வு இதுதான். இதுவரையிலும் 32 உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், சில குழிகள் தோண்டும்போது இன்னும் அதிகமான உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்படலாம். தமிழக அகழாய்வுகளில் மிக அரிதாக கிடைக்கக்கூடிய இரண்டு பக்கமும் கூர்மையான முனைகளைக் கொண்ட கத்தி இங்கு கிடைத்திருக்கிறது. இது பழங்கற்காலத்தில் மனிதர்கள் பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை தமிழகத்தில் நடந்த அகழ்வாராய்ச்சிகளில் கடலோரப் பகுதிகளில் மட்டும்தான் ரோமானிய மட்பாண்ட வகைகள் கிடைத்திருக்கிறது. இப்போது தான் முதன்முறையாக கடல்கரையில் இருந்து வெகுதொலைவில் இங்கு ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்திருக்கிறது. அக்காலத்தில் தமிழ்நாட்டுடன் ரோமானியர்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பினை இது வெளிப்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அகழாய்வில் நேரில் பார்க்க பட்டறைப் பெரும்புதூர் சென்று இறங்கினோம். சுற்றுமுற்றும் ஆளரவமற்ற பொட்டல் வெளி. தூரத்தில் விறகுகட்டை தூக்கிக்கொண்டு வந்த ஒருவரிடம் விசாரித்தால் அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்திற்கு வழி சொன்னார். ஊரில் எல்லோருக்குமே அகழ்வாராய்ச்சி பற்றி தெரிந்துக்கிறது. பெரும்பாலான ஊர் மக்கள் அங்கேதான் கூடி அகழ்வாய்வை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த தொல்லியல் ஆய்வாளர் பாஸ்கருடன் பேசினோம்.

'பழங்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்புள்ள ஏதாவது ஒரு பகுதியைத் தேர்வுசெய்து ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சி செய்துவருகிறோம். அப்படி இதுவரையிலும் எங்கள் குழு தமிழ்நாட்டில் மட்டும் 38 இடங்களில் ஆராய்ச்சி செய்திருக்கிறது. சென்ற வருடம் ராமநாதபுரம் அழகன்குளத்தில் களஆய்வு நடத்தினோம். இந்த வருடம் ஏப்ரல் 22ஆம் தேதியிலிருந்து பட்டறை பெரும்புதூரில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறோம். கொசஸ்தலை ஆறு ஓடும் பகுதியாக பட்டறை பெரும்புதூர் இருப்பதால் இந்த ஊரில் கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு இங்கே முதற்கட்ட ஆய்வு செய்தோம். அதில் கிடைத்த தகவல்களால் இந்த அகழ்வாராய்ச்சி திட்டமிடப்பட்டது. தோண்டத் தோண்ட ஆச்சரியம். இதுவரை தமிழ்நாட்டில் கிடைத்துள்ளவற்றிலேயே மிக அரிதாக கற்காலத்தைச் சேர்ந்த பொருட்களும் இந்த அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

30 ஆயிரம் ஆண்டுகள் முதல் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையிலான காலகட்டத்தை கடைக்கற்காலம் என்றும் 10 ஆயிரம் ஆண்டுகள் முதல் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையிலான காலத்தை முன்கற்காலம் என்றும் 4 ஆயிரம் ஆண்டுகள் முதல் 3 ஆயிரம் ஆண்டுகள் முன்பு வரையிலான காலத்தை புதிய கற்காலம் என்றும் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தை இரும்புக் கற்காலம் என்றும் வரையறுக்கிறோம். அதன் அடிப்படையில் பார்த்தால் இப்பகுதியில் 30 ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ச்சியாக மனித இனம் வாழ்ந்து வருவதற்கான அனைத்துச் சான்றுகளும் கிடைத்திருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளிலேயே இது மிகமுக்கியமான ஆராய்ச்சியாக இருக்கப் போகிறது.

பட்டறைப் புதூர் ஆற்றங்கரையில் இருந்தாலும் எப்போதும் ஆற்றிற்குச் சென்று தண்ணீர் எடுத்து வர முடியாது என்பதற்காக தங்களது குடியிருப்பிற்கு அருகிலேயே குழி தோண்டி சுடுமண்ணையிட்டு உறை கிணறுகள் அமைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் காஞ்சிபுரம், மாமல்லபுரம் அருகேயுள்ள வசவசமுத்திரம், பாண்டிச்சேரி அருகேயுள்ள அரிக்கைமேடு, மதுரை அருகேயுள்ள கீழமேடு, தூத்துக்குடியிலுள்ள கொற்கை மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் இப்படி உறைகிணறுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றிற்கு அடுத்தபடியாக இப்போது பட்டறை பெரும்புதூரில் உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது' என்றார் பாஸ்கர்.

இந்த ஆய்வின் முக்கியத்துவம் பற்றி நம்முடன் பேசிய தமிழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் முன்னாள் உதவி இயக்குனர் துளசிராமன் சொல்லிய தகவல்கள் மேலும் ஆச்சரியமூட்டியது.

'தற்போது கொசஸ்தலை ஆறு ஓடிக்கொண்டிருக்கும் இடத்தில் ஒரு காலத்தில் பாலாறுதான் ஓடிக்கொண்டிருந்தது. காலப்போக்கில் அது தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு காஞ்சிபுரம் வழியில் சென்று விட்டது. இப்போதும்கூட கொசஸ்தலை ஆற்றை பழைய பாலாறு என்றுதான் அழைப்பார்கள்.

சங்ககாலத்தில் காஞ்சிபுரம் பெரிய தலைநகரமாக விளங்கியது. தொண்டைமான் இளந்தரையன் ஆட்சிக் காலத்தில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்களும் வழிப்போக்கர்களும் வடநாட்டிலிருந்து காஞ்சிக்கு பண்பாடு மற்றும் வணிகப் போக்கிற்காக வந்திருக்கிறார்கள். அப்படி வருபவர்கள் இந்த வழியாகத்தான் வந்திருக்கிறார்கள். வியாபாரத்துக்காக வருபவர்கள் இடையில் ஓர் ஊரில் தங்கி இளைப்பாறிச் செல்வார்கள். அதனை வடுகப்பெருவழி என்று சொல்வோம். அப்படி ஒரு முக்கியமான வடுகப்பெருவழியாக பட்டறை பெரும்புதூர் அக்காலத்தில் விளங்கியிருக்கிறது. இப்போது இந்த இடத்தில் கிடைத்துள்ள உறை கிணறுகளும் குடியிருப்புகள் இருந்ததற்கான தடயங்களும் அதை நிரூபிக்கின்றன.

நான் தொல்பொருள் ஆய்வாளராகப் பணியாற்றியபோதே பட்டறைப் பெரும்புதூரில் மேற்பரப்பு ஆராய்ச்சி செய்தோம். அப்போதே 2 ஆயிரம் ஆண்டிற்கு முந்தைய கருப்பு மற்றும் வெள்ளைப் பானைகள் கிடைத்தன. தற்போது கொசஸ்தலை ஆறு ஓடும் பகுதிகளில் மேலும் ஆழமாக 12 அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டுள்ளன. ஒரு அகழாய்வுக்குழி என்பது 4க்கு 4

தொடர்ச்சி 34ஆம் பக்கம்...

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# OPEN HOUSE

on Saturday
August 6, 2016
12 Noon To 4pm

## @ GTA SQUARE

## BRAND NEW
## COMMERCIAL CONDO UNITS FOR SALE...

MIDLAND/FINCH/KENNEDY (Most Desirable Location)




Four-storey commercial center
Price Starting From $86,000
Size Starting From 294sq.ft
147 Surface Parking
9' Finished T Bar Ceiling
Basic Finishes By Developer
Maintanance Fee
$0.45/month/sq.ft.

Suitable for Small to Medium business like, legal offices,accounting firms,law offices,education centers,advertising agencies,insurance offices, cafe,family lending,travel agency,worship place, mortgage &real estate offices, driving schools and many more...

Why do you want to Lease? For Further Info Call:

# 416 321 6969

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HomeLife/GTA Realty Brokerage*

*Independently Owned & operated


Parkway Mall Mobilicity 5 Days Back-To-School
$50 OFF COUPON
IMPROVED Network Coverage
$25/mo
UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging
$35/mo
Free Voice Mail
UNLIMITED Data, Internet, UNLIMITED Download
UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging
All plans including Caller ID, Call waiting and more...
IPhone 5s 16GB $549.99 $299.99
Samsung Galaxy S6 32GB $729.99 $429.99
Samsung Galaxy Note 4 32GB $799.99 $399.99
Motorola Moto X (2nd gen) $499.99 $129.99
Samsung Galaxy Grand Prime $399.99 $99.99
Samsung Galaxy Ace 2x $109.99 $59.99
ZTE Salem 3G $129.99 $0
No Contract !! No Credit Check !!
All phones working to Mobilicity now !!! Even Iphone 4, Bring in your own phone !!!
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™
Limited time offer and may only be available to new activations at Parkwy Mall Mobilicity. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate from the Mobilicity Unlimited Zones. Premium and special numbers are excluded. Fair usage policy 2 GB allotment will be applied on the data in $35 plan & restriction will be applied. Additional terms and conditions apply. Subject to change without notice. ©2016 Mobilicity. 'Mobilicity', 'Now that's smart', the Mobilicity designs and the Mobilicity logo are trademarks of Mobilicity. Other trademarks shown may be held by their respective owners. All rights reserved. Parkway Mall Mobilicity additional terms and conditions: $50 coupon can only be applied on phones and have been already applied on above phones. Special is only available at Parkway Mall Mobilicity. Limited time offer. Third party handsets are sold by independent store owners to customers directly. These handsets are not originally from Mobilicity. Return, exchange and warranty for these handsets may vary. Please ensure that you enquire further details from stores before you make your purchase.


Lebara's
Tamil Fest
தமிழர் தெரு விழா
IDEAL DEVELOPMENTS
GRAND
3 DAY
CELEBRATION
AUGUST
26,27,28
MARKHAM ROAD, TORONTO
TITLE SPONSOR
Lebara
POWERED BY SPONSOR
IDEAL DEVELOPMENTS
ZONE SPONSORS
Aalayaa
ADAGA Catering
416-738 9191
BonaFide Mortgage
COMPUTEK COLLEGE
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
HONDA
Formula Honda
Where You're Treated like Family.
NAVA LAW
PROFESSIONAL CORPORATION
SUTHAHOMES.ca
UBER
MEDIA SPONSORS
ATN
doto
LANKASRI
metrolandmedia
toronto
OFFICE
10 Milner Business Court, Suite 513
Toronto, ON M1B 3C6
416 240 0078
tamilfest.ca

# முதல்வர் கத்லின் வின் GTA Square Mallக்கு வருகை!

ஒன்றாறியோ மாகாண முதல்வர் கத்லின் வின் அவர்கள் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் GTA Square Mall க்கு வருகை தந்தார். திரு. ராஜா மகேந்திரன் முதல்வரை வாசலில் வைத்து வரவேற்றார்.





- வீரகேசரி மூர்த்தி -

செல்விகள் சீத்தா சுகுமார், ஜீவா குமார் ஆகியோர் மலர்ச்செண்டு வழங்கினர். அங்கு குழுமியிருந்த பொதுமக்களும் முதல்வரை மகிழ்ச்சி யுடன் வரவேற்றனர்.

ஒன்றாறியோ மாகாண முதல்வர் கத்லீன் அவர்கள் இங்கு வருவதற்கு முன்னர் றூஜ் றிவர் தொகுதி இடைத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரான திரு. பிரகல் திருவின் தேர்தல் அலுவலகத்தினை ஸ்ரீல் வீதியும், மிடில்பீல்ட் வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள 5651ஆம் இலக்கக் கட்டிடத்தின் 23வது யூனிற்றில் திறந்து வைத்தார். அதன் பின்னரே திரு. பிரகல், திரு. டேவிட் பூபாலபிள்ளை ஆகியோருடன் முதல்வர் GTA Square Mall க்கு வருகை தந்தார். உள்ளே நுழைந்ததும் வர்ண வர்ண ஆடைகளைக் கொண்டிருந்த புடவைக் கடைகளைக் கண்டதும் முதல்வர் மிக்க மகிழ்ச்சியுடன் அவற்றினை இரசித்தார். அங்கு தொங்க விடப்பட்டிருந்த நீண்ட உடைகளைப் பார்த்து விருப்பப்பட்ட முதல்வர் ஒரு நாள் "சொப்பிங்" செய்வதற்காக தான் இங்குவர வேண்டும் எனவும் கூறினார். அத்துடன் ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று வர்த்தகம் எப்படி நடக்கிறது? என ஆவலோடு கேட்டார். எல்லாம் நல்ல படியாக நடக்கிறது என வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கூறியதும் அவர் மிகவும் சந்தோஷப்பட்டார்.

வர்த்தக உரிமையாளர்கள் பலர் அவருடன் கூடிநின்று படங்கள் எடுத்துக் கொண்டனர். புடவைக் கடைகள், நகைக் கடைகள் யாவற்றுக்கும் சென்ற முதல்வர் அங்குள்ள மலர் கடைக்கு சென்றதும் அதன் உரிமையாளர் பரம் அவர்கள் மலர்ச் செண்டினை வழங்கி அவரை வரவேற்றார்.

இரண்டாவது மாடியிலுள்ள விளம்பரம் பத்திரிகை அலுவலகத்துக்கு முதல்வர் சென்றபோது பத்திரிகை ஆசிரியர் மற்றும் அலுவலகர்களுடன் நண்பர் களும் வரவேற்றனர். Heroes Catering நடத்துனர் குமார் வருகை தந்தவர் களுக்கு இலவசமாக சிற்றுண்டி, தேநீர் பரிமாறியதனைக் கண்டு யாவரும் நன்றியைத் தெரிவித்தனர்.

GTA Square Mall லில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களுக்கும் அங்கு வருகை தந்திருந்த வாடிக்கையாளர் களுக்கும் அன்றைய மாலைப் பொழுது மகிழ்ச்சி மிக்கதாக அமைந்தது. பிரகல் திரு தேர்தலில் வெற்றி பெற தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இக்கட்டிடத்தொகுதி அமைந்திருக்கும் இத்தொகுதியில் நடைபெற இருக்கும் ஒன்ராறியோ மாகாண இடைத்தேர்தலில் போட்டியிடும் பிரகல் திருவிற்குப் பலரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வாழ்த்தினைத் தெரிவித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

# “யக்ஞசேனி” நாட்டிய நாடகம்



ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கான நிதி சேகரிப்புக்




தொடர்புகளுக்கு: **416.318.9866**

---

# JOB JOB JOB

**AZ DRIVERS WANTED**
Need immediately experience drivers (At least one year) for long & short run within Canada & USA. Benefit available.
தொடர்புகளுக்கு: **416.835.6701**

---

**பெண் பராமரிப்பாளர் தேவை**
சக்கர நாற்காலியில் (Wheel Chair) இருக்கும் வயது முதிர்ந்த பெண்மணி ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பொறுப்புள்ள பெண் உதவியாளர் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: **416.587.7267**

---

**DRIVER & GENERAL HELP WANTED IMMEDIATELY**
Output insulation laminate insulation tile insulation செய்வதற்கு ஆட்கள் தேவை. 20 வயதிலிருந்து 45 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.671.2756**

---

# JOB JOB JOB

**PIZZA MAKER & DELIVERY DRIVER WANTED**
**KENNEDY & ELLESMERE**
Apply in person
880 Ellesmere Rd. #10
**PIZZA 4 EVER 647.201.9740**

---

# HELP WANTED

**SENIOR HELPER WANTED**
Morningside & Lawrence இல் வசித்துவரும் வயோதிப பெண்மணியை பகலிலும், இரவிலும் பார்ப்பதற்கு அனுபவம் வாய்ந்த பெண் உதவி யாளர்கள் இருவர் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**416.752.8675/416.410.7543**

---

# HELP WANTED

**Maple (near Wonderland)**
Arun Bakery க்கு உடனடியாக அனுபவம் மிக்க சமையல் வல்லுனர் தேவை. Weekend Cashier (Ladies preferred) also wanted.
**647.686.4418**
**905.303.4141**

---

# வேலை வாய்ப்புக்கள்

**கனடாவுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு மட்டும்.**
நீங்கள் கல்வி, தொழிலில் தகுதியும், அனுபவமும் உடையவர்களா? அப்படியானால் நீங்களும் கனடா வரலாம். உங்களின் தகுதிக்கு அமையக் கூடிய வேலை வாய்ப்பை சரியான நிறுவனங்களில் இருந்து சகல சட்ட விதி முறைகளுக்கும் அமைய ஒப்பந்தங்களுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு: **647.478.9510**

---

# புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.
• பெரியது $5 *வரி கட்டப்பட்டது*
தொடர்புகளுக்கு: **647.629.9095**

---

# PIZZA- PIZZA

அனுபவமுள்ள /அனுபவமற்ற Delivery Drivers & Cashier அனுபவமுள்ள, Cook போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
Full time or Part Time.
**416.505.1772**
**647.706.2046**

---

# GENERAL HELP WANTED

**General Help Wanted For Renovation work.**
**416.890.2361**

---

# வயோதிபர் பராமரிப்பு

1 Bedroom + உணவு, சகல வசதிகளுடனும் வயோதிபர் பராமரிப்பு. சகல உதவிகளும் செய்யப்படும்.
**647.710.2601/**
**416.750.4068**

---

# LAND FOR SALE

Commercial & Residencial land for sale. 40 Minutes drive from ***Santhom Chennai.***
17 Laks per Ground Indian rupees.
Contact: ***718.662.6692(Newyork USA)***

---

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

---

# LAND FOR SALE

2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. 3 km from Jaffna town (Vannarpannai).
(4 Rooms with attached washroom)
விலை 1 கோடியே 10 லட்சம்.
***0044.744.829.7718 (Sathees)***
***416.720.0548 (Sakunthala)***

---

**தையல் வகுப்புக்கள்/ Orders**
**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse, Ladies Items மற்றும் Saree Blouse Block எடுத்து தைப்பதற்கும் கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும்.
**416.438.2552 / 647.853.5524**

---

# HELP WANTED

**DRYCLEANING PLACE**
**MARKHAM & DENISON**
**Cashier, Repair & Alternations**
**EXPERIENCE PEOPLE PREFERRED**
**CALL SYED**
**416.985.3490**

---

# JOB JOB JOB

**DELIVERY DRIVER & GENERAL LABOUR WANTED**
**MIDDLEFIELD & FINCH**
Need a ***Delivery Driver and General Labour / Food packaging*** person for a food processing and packaging company.
***Call: 416.839.8911***

---

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 32

---

# HELP WANTED

Down Town இல் உள்ள Italian restaurant க்கு Dish Washer வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை.
Contact : **416.356.7227**

---

# ROOM FOR RENT

**MIDLAND AVE. & EGLINTON RD.**
2 Room for rent in main floor. 1 Room for rent in bsmt. 3 அறைகளும் தனித்தனியாகவும் வழங்கப்படும். Parking, Laundry, Internet. Single / Students (Male) preferred. Avail. immediately. Close to plaza, School, TTC, Kennedy Subway.
தொடர்புகளுக்கு: **647.869.1633**

---

# JOB JOB JOB

**TABLE SAW OPERATOR WANTED**
**STEELES & GOREWAY**
Brampton Based company Looking for experience Table Saw operators.
***Contact: 905.629.8264***

## லண்டன் செல்வதற்கான அரிய வாய்ப்பு

நீங்கள் O/L, A/L படித்துவிட்டு வெளிநாடு செல்லக் காத்திருப்பவரா?
அப்படியாயின் இது உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு
அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் லண்டனிற்க்கான student விசாக்கள் செய்து தரப்படும். அடிப்படை தகைமைகள்- O/L or A/L
விசாக்களுக்கு தேவையான வங்கிக் கணக்குகளும் செய்து தரப்படும்..

தொடர்புகளுக்கு - **Mr:-Sathes 0044.744.829.7718**
**0044.744.828.9717**

## AZ DRIVERS WANTED

***ASAP.50 SINGLE & .55 TEAM***

- *Dedicated Run*
- *Newer trucks - Volvo*
- *GTA city drivers $20.00 / HR*
- *Paid every weekly*
- *.50 Single / .55 team*

*Minimum 2-3 Driving Experience*
*Owner operator wanted / paid weekly*

***Contact: 416-737-5728*** ***Email:info@nylogistics.ca***

## WORK OPPORTUNITY

### *Rajee beauty saloon*

346 Main St. Markham. Ontario L3P 1Z1

***Hair stylist and beautician***

Work opportunity for men & ladies

தொடர்புகளுக்கு - Praba - ***647.867.5696***

## OFFICE SPACE FOR RENT
## MARKHAM & DENISON

**Brand New Office Space for rent**
**$375 Per Month**
**Ideal For Healthcare/Massage, Mortgage Broker, Accountant, Paralegal, Lawyers, Insurance, and Travel Agent.**

Close to Costco, Home Depot,
Huge trafic count Hwy 7 & 407
Rent Includes TMI

**Call: A.Syed**
**416-985-3490**

## *CLEANERS WANTED*

***Toronto Airport*** இல் வேலை செய்வதற்கு
35 இற்கும் மேற்பட்ட ***Cleaners*** தேவை.

3 Shift வேலைகள் உண்டு



காலை 6:00 - 2:00
மதியம் 2:00 - 10.00
இரவு 10:00 - 6:00

***WHMIS Certificate*** விரும்பத்தக்கது.
தேவையாயின் வாகன வசதி ஒழுங்கு செய்துதரப்படும்.
கீழ்காணப்படும் முகவரிக்கு நேரடியாக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணி தொடக்கம் 3 மணி வரை வந்து விண்ணப்பிக்கவும்.

### *PPS Group Inc.*

4544, Sheppard Ave. East, Unit #201
Toronto, ON M1S 1V2
தொடர்புகளுக்கு: ***416.471.4465***
email : ***info@ppsgroupinc.com***

## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**தொடர்புகளுக்கு: 416.299.8361**

## MATH & PHYSICS TUTION

**By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.**

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

## உலகத் தொல்காப்பிய மன்றம் - கனடாக் கிளை
### தொல்காப்பிய மாதாந்தத் கருத்தரங்கம்

ஆவணி மாதக் கருத்தரங்கம் எதிர்வரும் 13.08.2016 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்

சொற்பொழிவாளர்: கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள்
யாழ்.பல்கலைக்கழக முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர்

பேசு பொருள்:"தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்ளல்"
பொருளதிகாரப் பகுதியை மையப்படுத்திய சில சிந்தனைகள்

Unit 3A - 5637, Finch Avenue East, Scarborough, On. M1B - 5K9
Finch & Taps Court, Dr. Lambotharan's Maiyakam Institute

தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

# கபாலி - திரை விமர்சனம்

யூலை 22இல் வெளிவந்த இந்த ரஜினிகாந்த் படத்தின் பெரும்பகுதி மலேசியாவில் எடுக்கப்பட்டது. இது அங்கு உள்ள இந்தியத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் காட்டும் ஒரு பொழுது போக்குப் படமாகும். அத்துடன் இது ஒரு வழக்கமான ரஜினிப்படத்தை விட பாட்டு, சண்டை என்பவற்றில் வித்தியாச மான படமாக இருக்கிறது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு கபாலி என்ற கபாலீஸ்வரர் (ரஜினி) மலேசிய சிறையில் இருந்து விடுவிக்கப்படுகிறார். 80 ஆம் ஆண்டுகளில் அவர் மக்களுக்கு நல்லது செய்யும் குழு ஒன்றின் தலைவராக இருந்தவர். அவரது '00' என்ற குழு போதைப் பொருட்கள் கடத்துவதிலோ, பெண்களைக் கடத்துவதிலோ ஈடுபடுவ தில்லை. மக்களுக்கு நல்லதையே செய்ப வர்கள். ஆனால் இப்பொழுது (2015இல்) நிலைமை மிகவும் மாறி விட்டது எனக் கபாலி உணருகிறார். '00' க்கு விரோதி யான '43' என்ற குழு மலேசியாவில் பிரபலமாகி, எது '00' குழு செய்ய வில்லையோ அவற்றையெல்லாம் செய்து பல இளைஞர்களின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றனர்.

இவற்றுடன் கபாலி எந்தச் சண்டையில் மாட்டுப்பட்டுச் சிறைக்குச் சென்றாரோ, அந்தச் சண்டையில் தனது கர்ப்பிணியான மனைவி குமுதவல்லி (ராதிகா அப்தே)



உயிருடன் தப்பினாரா இல்லையா? அவருக்குக் குழந்தை பிறந்ததா? எனக் கண்டுபிடிக்க முயலுகிறார்.

மலேசிய இந்தியர்களுக்கு நன்மை செய்யவும், தன் மனைவியின் நிலையை அறியவும் விரும்பும் கபாலி இதைச் செய்வாரா? இல்லாவிட்டால் '43' குழுவிடமோ அல்லது மலேசிய காவல திகாரிகளிடமோ சிக்கி இறப்பாரா? எனப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

'கபாலி' மலேசியாவில் வாழ்ந்த மற்றும் வாழும் இந்தியர்களது பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றது. மலேசியாவின் சனத்தொகையில் 7% மட்டுமே இந்தியர் கள். அதில் 90%க்கு மேலானவர் தமிழர். ஆனால் குழுக்களில் இருப்பவர்களில் 70% ஆனவர்கள் இந்தியர்கள் ஆவர். இது படத்தில் பல கதாபாத்திரங்களாலும், சம்பவங்களாலும் உணர்த்தப்படுகிறது. இப்படத்தில் மலேசிய இந்தியர்களின் வரலாறும், அவர்கள் நடத்தப்படும் விதமும் ஒரு கற்பனை வடிவத்தில் காட்டப்பட்டுள்ளது. இப்படிக் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்யும் குழுவின் தலைவர் தான் கபாலி. அவரும் கூலிக்கு வேலை செய்து, படித்து உயர்ந்ததால் அவரது விரோதிகள் அவரை மதிக்க விரும்பவில்லை. அவருக்கு உதவியாக அவரது மனைவி இருக்கிறார். அவரே கபாலிக்கு (பார்வையாளர் களுக்கும்) பல அறிவுரைகளைக் கூறி ஊக்குவிக்கிறார். கோபமாக இருக்கும் போது பேசக்கூடாது, மூச்சுத்தான் விட வேண்டும் என்று கூறுகிறார். பிறர் கபாலியைக் குறைவாகப் பார்த்து அவர்



ஞா. ஆரணி
அகவை 17

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




நூல் வெளியீடு
'பாட்டி சுடாத வடை'

ஆரணி ஞானநாயகன் 2011இல் இருந்து இதுவரை விளம்பரம் பத்திரிகைக்கு எழுதிய நீதிக்கதைகளில் இருந்து ஐம்பதை படங்களுடன் தெரிவு செய்து விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் ஒரு 'சிறுவர் கதைப்புத்தகமாக' வெளியிடுகின்றது.

திகதி: Friday, August 5th, 2016

இடம்: தமிழர் செந்தாமரை மண்டபம்
1160 Tapscott Units 2 & 3
Scarborough, ON, M1X 1E9

நேரம்: மாலை 5 மணி

தலைவர்: திரு. ராஜா மகேந்திரன்

உரைகள்: திருமதி. கோதை அமுதன்
திரு. S. திருச்செல்வம்
கவிஞர் வி. கந்தவனம்

சிறுவர், பெற்றோர், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

# கற்கால...

## 20ஆம் பக்கத்தொடர்ச்சி

மீட்டர் அளவாகும். இதில் ஆழம் செல்லச் செல்ல முதல் அடுக்கு இரண்டாம் அடுக்கு மூன்றாம் அடுக்கு என்று பிரிக்கப்படும். தற்போது முதல் அடுக்கில் சோழர்கள் வாழ்ந்ததற்கான சுவடுகளும் இரண்டாம் அடுக்கில் பல்லவர்கள் வாழ்ந்ததற்கான சுவடுகளும் மூன்றாம் அடுக்கில் சங்க காலத்தைச் சேர்ந்த சுவடுகளும் நான்காம் அடுக்கில் கற்காலத்தைச் சேர்ந்த சுவடுகளும் ஐந்தாம் அடுக்கில் பழைய கற்



காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் வாழ்ந்த சுவடுகளும் கிடைத்துள்ளன.

இந்த ஆராய்ச்சியில் மிகவும் ஆச்சரியமாக கண்ணிற்கு மை தீட்டக்கூடிய தங்கமுலாம் பூசப்பட்ட செப்புத் தகடு ஒன்றும் கார் நீலியன் எனும் விலையுயர்ந்த அலங்காரம் செய்யப்பட்ட மணிகளும், கார்நீலியன் கண்ணாடி மணிகளும், சங்கு வளையல் துண்டுகளும் கிடைத்துள்ளன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி அணிந்திருந் ததாகச் சொல்லப்படும் சங்கு வளையல்கள் போன்றவை அதிகமாகக் கிடைத்துள்ளன. இதுபோன்ற மணிகளையும் அணிகலன்களையும் அக்காலத்தில் செல்வந்தர்கள் மட்டும்தான் உபயோகித்திருக்கிறார்கள். இங்கே அது ஏராளமாகக் கிடைத்திருப்பதால் அந்தக் காலகட்டத்தில் இந்தப் பகுதியில் வாழ்ந்தவர்கள் எல்லோரும் நல்ல வசதி படைத்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல் சுடுமண்ணால் ஆன சதுரங்க காய்களும் கிடைத்துள்ளன. வழிப்போக்கர்களாக வருபவர்கள் பொழுது போக்குவதற்காக அப்போது சதுரங்கம் விளையாடி இருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இங்கு கிடைத்துள்ள மண்பானைகளில் பாய்மரப் படகின் உருவமும் துடுப்பும் வரையப்பட்டுள்ளன. இவை கொசஸ்தலை ஆற்றில் படகு மூலமாக வாணிபம் செய்ய வந்தவர்கள் உபயோகப்படுத்தியவையாக இருக்க வேண்டும்.

நான் மிகவும் வியந்துபோனது தமிழகத்திலேயே முதன்முதலாக இங்கு கிடைத்துள்ள நறுமணப் புகைக்கலம்தான். இது ஓர் அகழ்வாராய்ச்சிப் பொக்கிஷம். 2 அடி நீளமுள்ள கூம்பு வடிவிலான குடுவை. அதன்மீது சிறிய துளைகள் போடப்பட்டிருக்கின்றன. சந்தனம் உள்ளிட்ட நறுமணப் பொருட்களை உள்ளே வைத்து புகைமூட்டும்போது துளைகள் வழியாக வெளிவரும் புகையில் நறுமணம் வீசும்விதமாக இது செய்யப்பட்டுள்ளது' என்றுகூறும் துளசிராமன், 'தமிழகத்திலேயே இதுவரை நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளிலேயே முக்கியமானதாக பட்டறைப் பெரும்புதூர் அகழ்வாராய்ச்சிதான் இருக்கும்' என்கிறார். 'காரணம், இதுவரை நடத்தப்பட்டுள்ள அகழ்வாய்வுகளில் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழர்கள் வாழ்ந்ததற்கான சுவடுகள் மட்டும்தான் கிடைத்தது. கீழடியில் சங்க காலத்தைச் சேர்ந்த மனிதர்களின் சுவடுகள் மட்டும்தான் கிடைத்தது. இதுபோலத்தான் தமிழகத்தில் நடந்த ஆராய்ச்சிகள் எல்லாமே. ஆனால், பட்டறைப் பெரும்புதூர் அகழ்வாராய்ச்சியில் மட்டும்தான் முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கடைக்கற்கால மனிதர்களில் தொடங்கி, முன்கற்காலம், புதியகற்காலம், இரும்புக்கற்காலம் வரையிலான மனிதர்கள் வாழ்ந்ததற்கான சுவடுகள் அனைத்தும் ஒன்றாகக் கிடைத்திருக்கிறது. அதனால், பட்டறைப் பெரும்புதூர் அகழ்வாராய்ச்சி தொல்லியல் வரலாற்றிலேயே முக்கியமானதாகத் திகழப்போகிறது' என்றார் துளசிராமன்.

'தமிழ்நாட்டின் தென்பகுதிகளான கொற்கை, அழகன்குளம், திருநெல்வேலி, தூத்துக்குடி தொடங்கி இப்போது வடக்கே பட்டறைப் புதூர் வரைக்கும் பல்வேறு ஊர்களில் நடைபெற்ற தொல்லியல் ஆராய்ச்சிகள் நமக்கு உணர்த்துவது ஒன்றை மட்டும்தான். அவை தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான கலாசாரம், பண்பாடுகளை நம் முன்னோர்கள் கொண்டிருந்தார்கள் என்பதுதான். தமிழக அரசின் தொல்லியல் துறையானது இந்த ஆராய்ச்சியை இத்தோடு நிறுத்திவிடாமல் மேலும் தொடர்ந்தால் தமிழகத்தில்



50 மற்றும் 60 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்களையும் கண்டுபிடிக்க முடியும் என்றே தெரிகிறது. இதன் மூலம் மனித இனத்தின் நீண்ட பாரம்பரியத்தை நம்மால் தெரிந்துகொள்ள முடியும்' என்கிறார் தொல்லியல் ஆய்வாளர் காந்திராஜன்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



## Math tutorial 327

Answers to tutorial 326

1) $1/16 = 1(1/2)^{14/h}, (1/2)^4 = (1/2)^{14/h}$

$4 = 14/h$, $h = 3.5$

2) The number of committees will be $^{11}C_5 = 462$

The number of committees that have both Ron&Enzo will be $^{9}C_3$ =84, So the number of committees without Ron& Enzo =462-84=378

3)The family of planes passing thro. The line of intersection of the planes is $x+y+z-1+k(2x-3y-z+2)=0$ Since the particular member passes thr. Origin (0,0,0) k=1/2.Therefore the particular plane is

$X+y+z-1+1/2(2x-3y-z+2)=0$, Req. Eqan. Is $4x-y+z=0$

4)Any walk can be described by five Rs and 3Us ,the number of sequences is $\frac{8!}{5!3!}=56$

TUTORIAL 327 Questions

1)How many of the arrangements of the word Mississippi are palindromes?

2)My password is 7-symbol sequence formed from upper – and lower -case letters and the digits from 0to 9.Yesterday i forgot the last 3 symbols. It takes me 20 seconds to try to log onto my computer.Approximately how many hours will it take for me to check all the possible passwords?

3)Write the vector (0,8) as a linear combination of the vectors (2 ,4) and ( -2 ,1)?

4)(a) Find the family of cubic functions whose x- intercepts are -3, 0 ,2

(b) Find the particular member of the above family whose graph passes through the point (-1 ,12)?

By Mr S.F.Xavier (Teacher)

Tel 6473409490/4167322228

# கற்பனை கலந்த உண்மைக்கதை

## அலசல் அரங்கம் - 9

கிருஷாந்தன் கூறுகிறான்...

அடுத்த நாள் காலை எழுந்து அறைக்குள் எட்டிப் பார்த்தேன். லீ நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான். விரைவில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, கோப்பி போட்டுக் கொண்டு வரவேற்பறையில் ஜூலியாவின் வருகைக்காகக் காத்திருந் தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை. யாவரும் ஆறுதலாகவே எழுந்து கோப்பி போடக் கீழே வருவார்கள். சிலவேளை தேவாலயத் துக்குப் போவதற்கு ஜூலியா நேரத்தோடு கிளம்பி வருவார் என எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அரை மணித்தியாலத்தின் பின் வந்தா, என்னைக் கண்டதும் ஆச்சரி யத்தோடு ஏன் இங்கே இருக்கிறாய் எனக் கேட்டா. எனக்கு என்ன சொல்வதென்று

**- துறையூரான் -**

தெரியவில்லை. அழுகைதான் வந்தது. உடனே என்னைச் சமாதானப்படுத்தி ‘இதில் இரு, நான் கோப்பி போட்டுக் கொண்டு வருகிறேன். இருந்து ஆறுத லாகக் கதைப்போம்’ எனச் சொல்லிவிட்டு சமயலறைக்குப் போனா. என்னத்தைச் சொல்வது எப்படிச் சொல்வது என யோசித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தின்பின் கோப்பியோடு வந்து எனக்கு முன்னாலிருந்த சோபாவில் இருந்து கொண்டே என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? எனக் கேட்டா. இரவு நடந்தவற்றைத் தட்டுத்தடுமாறி எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சொன்னேன். அவ அதைப் பெரிதுபடுத்தாமல் அவன் ஒருவேளை விளையாட்டுக்கு அப்படி உன்னைப் பயப்படுத்தி இருக்கலாம். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. அவன் எழும்பியவு டன் அவனோடு கதைக்கிறேன். உங்கள் CAS ஆலோசகரோடு திங்கட்கிழமை கதைக்க இருக்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. இன்றைக்கு உனக்கு வீட்டு வேலை அதிகம் இல்லையென்றால் எங்களோடு தேவாலயத்துக்கு வரலாம் எனச் சொன்னா. நான் சிறிது நேரம் யோசித்து விட்டு “ஓம் வருகிறேன்” என்று சொன்னேன். அவவுக்கு அது சந்தோஷ மாக இருந்தது. நீ குளித்து றெடியாக இரு, நாங்கள் தயாரானவுடன் எல்லோரும் போவோம். ஒன்றுக்கும் பயப்படாதே எனச் சொல்லி விட்டுப் போய்விட்டா. நான் அறைக்குள் சென்று அவசர அவசரமாகக் குளித்து வெளிக்கிட்டு வரவேற்பறைக்கு வந்து அங்கிருந்த பேப்பரை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். தேவாலயம் போவதற்குச் சம்மதித்தற்குக் காரணம், அவனைப் பார்க்கவோ பேசவோ நான் விரும்பவில்லை. மேலும் வீட்டிலே தனியாக இருக்கப் பயமாகவும் இருந்தது. எனவே அவர்களோடு நிம்மதியாக வெளி யில் போய் வருவோமென எண்ணினேன்.

அவர்களோடு வெளியில் போனது மனதுக்கு நிம்மதியாக இருந்தது. நேரம் போனதே தெரியவில்லை. மத்தியானமாக இருந்ததால் பசி வயிற்றைக் கிள்ளியது. காலையிலும் சாப்பிடாததால் நேரே சமயலறைக்குச் சென்று பாணும் பட்டரும் எடுத்துச் சாப்பிட்டேன். அதன் பின் மெதுவாக அறைக்குள் எட்டிப்பார்த்தேன். சாம்லீ அங்கு இல்லை. எங்கேயோ ஊர் சுற்றப் போய் விட்டான். மனதுக்கு நிம்மதி யாக இருந்தது. அறைக்குள் சென்று உடுப்பை மாற்றிக் கொண்டு அடுத்த நாள் செய்ய வேண்டிய வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தேன். நேரம் போனதே தெரியவில்லை. ஜூலியா வந்து மத்தியானச் சாப்பாட்டுக்கு அழைத்த போதுதான் இரண்டு மணியென்பதை உணர்ந்தேன்.

அன்று பிற்பகல் வெளியே உலாவச் சென்றேன். பக்கத்திலிருந்த பூங்காவில் பல பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார் கள். அதைப் பார்த்தவுடன் நான் சிறு பிள்ளையாக இருந்த போது விளயைாடிய விளையாட்டுக்களும் ஊர் எண்ணங்களும் மாறி மாறி வந்து கொண்டே இருந்தன. இப்பிள்ளைகள் எவ்வாறு சுதந்திரமாகக் கவலை எதுவும் இல்லாமல் விளையாடு கிறார்கள். ஆனால் ஊரில் விளையாடக் கூட இடமில்லாமல், மனமில்லாமல் உயிருக்குப் பயந்து கொண்டே எமது பிள்ளைகள் வீட்டுக்குள் ஒளிந்து கொண்டு வாழ்க்கை நடத்திய நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். எவ்வளவு கொடுமை, எவ்வளவு இன்னல்கள், எவ்வளவு கெடுபிடி கள், ஆமிக்காரர் பயம் ஒரு புறம் புலிகள் பயம் இன்னொரு புறம், போர்ச் சூழலில் நமது மக்கள் படும் துன்பங்களும் சோக நிகழ்வுகளும் மனதை வந்து உறுத்திக் கொண்டே இருந்தன. அங்கிருந்த ஒரு சீமெந்து இருக்கையில் இருந்து அவற்றை யெல்லாம் அசைபோட்டுக் கொண்டிருந்தேன்.

திடீரென ஒரு குரல் ‘தம்பி நீர் தமிழா?’ என்று கேட்டது. எண்ணங்கள் கலைந்து பார்த்தபோது, ஒரு பெண்மணி என் முன்னால் நின்று கொண்டிருந்தா. ‘ஓம்’ என்று சொன்னேன். அவ அருகில் அமர்ந்து கதைக்க ஆரம்பித்தா. மனதுக்கு நிம்மதி யாக இருந்ததால் அவவோடு நேரம் போவதே தெரியாமல் கதைத்துக் கொண்டிருந்தேன். அவவும் பூங்காவுக்குக் கிட்ட இருப்பதாகவும் கனடாவுக்குப் புதிது என்பதும், மகள் ஸ்பொன்சர் பண்ணி வந்ததாகவும் அறிந்து கொண்டேன். என்னைப்பற்றி பல விடயங்களை அறிய

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



# EDUCATION

## Review Questions16-15

➢ Physics 11& 12

(11-A)A ball is dropped from the roof of a high building. A second ball is dropped 2.0 s later. How far apart are the balls when the second ball has reached a speed of 19.6 m/s.

(12-A) A pilot of an rescue plane travelling 180 km/h wants to drop supplies to flood victims 200 m below. Determine how far in advance the supplies should be dropped and how many seconds before the plane is directly overhead?

➢ BIOLOGY 12

(1) Identify and name the following compound.




(2) Calculate the total ATP production when molecule of glyceryl tripalmitate undergoes oxidation in a living cell.

(3) What is protein denaturation?

Discuss the conditions that promotes protein denaturation

➢ CHEMISTRY 11

A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$.

Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g.

What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

## Answer Key : 16-14

➢ PHYSICS 12

Horizontal component of the tension centripetal force ,

$$T\cos\theta = \frac{mv^2}{r} = \frac{mv^2}{l\cos\theta}$$

Vertical component of the tension force balances weight,

$$T\sin\theta = mg$$

String breaking strength = 100 N

$$\theta_{min} = \sin^{-1}\frac{mg}{T_{max}}$$

$$\theta_{min} = \sin^{-1}\left(\frac{0.780 \times 9.81}{100}\right)$$

$$\theta_{min} = 4.38$$

CHEMISTRY 12 & IB

(a)




(b)




(c) $CH_3CHO \longrightarrow CH_3CH_2OH$

$\longrightarrow CH_3COOH$

$CH_3COOH + CH_3CH_2OH \longrightarrow CH_3COOCH_2CH_3$

(i)

$E_k = eV = (1.6X\,10^{-19})\,60 = 9.6X\,10^{-18}$

(ii) $v = \sqrt{\frac{2Ek}{m}} = \sqrt{\frac{2\,X9.6\,X\,10^{-18}}{9.11X\,10^{-31}}} = 1.45X\,10^{13}$

(iii) $\lambda = \frac{h}{mv} = \frac{6.63\,X\,10^{-34}}{9.11X\,10^{-31}X\ 1.45X\,10^{13}}$

$=5.02X\,10^{-3}\mu m$

Answer key
16-15 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# கற்பனை...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

முயற்சித்தா. நான் அதிகம் கூற விரும்ப வில்லை. அத்துடன் நான் ஒரு காப்பகத்தில் இருப்பதை கூறவிரும்ப வில்லை. எனவே அவ தானாகவே கூறிய தகவல்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். தமிழ்ப் பெண்மணி ஒருவரைக் கண்டு கதைத்ததில் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. அதிக நேரம் இருக்க விரும்பாமல் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டேன். முடிந்தால் நாளைக்கும் சாயங்காலம் வரும்படி கேட்டுக் கொண்டா.

அன்று இரவு எட்டுமணியளவில் நான் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அறைக்கு வந்தேன். சாம்லீ வரவே இல்லை. இது என் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. ஜுலியா அவனோடு பேசினாவா என்பது கூடத் தெரியவில்லை. அறைக்குள் படுப்பதா வேண்டாமா எனப் பலமுறை யோசித்தேன். எதற்கும் வருவது வரட்டும் என்ற முடிவில், லைட்டை அணைத்து விட்டு நேரத்துக்குப் படுத்து விட்டேன். எப்போது நித்திரையானேன் எனத் தெரியாது. இருட்டில் யாரோ என் கட்டிலுக்கு அருகில் வந்து நிற்பது போல் உணர்ந்தேன். திடீரென எழுந்து தள்ளி விட்டேன். தடாலென்ற பெரும் சத்தத்தோடு சாம்லீ அங்கிருந்த மேசை மீது விழுந்தான். நித்திரைத் தூக்கத்தில் திடீரென விளக்கைப் போட்டேன். பேச்சு மூச்சில்லாமல் லீ விழுந்து கிடந்தான். சத்தம் கேட்டு மேலிருந்து ஜுலியாவும் பிறரும் ஓடி வந்தார்கள். நான் பயந்து ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன். அவனது நிலமையைப் பார்த்து ஜுலியா உடனே 911க்கு அழைத்தார். இதற்கிடையில் நான் பயந்து கொண்டே அறைக்கு வெளியே வந்து வரவேற்பறைச் சோபாவில் இருந்தேன். சிறிது நேரத்தில் அம்புலன்ஸ் வந்தது. அறைக்குள் போய் ஏதோ நடந்தது. பின் சாம்லீயை ஒரு தட்டின்மேல் கிடத்தி வெளியே தூக்கிக்கொண்டு போனார்கள். ஜுலியா வந்து என்னிடம் கேள்விகள் கேட்க ஆரம்பித்தா. அவன் என்னைத்தாக்க வந்தபோது நான் நித்திரைத் தூக்கத்தில் தள்ளி விட்டதாகக் கூறினேன். அவன் மேசைக்கு மேல் விழுந்ததால் பிடரிப் பக்கம் அடிபட்டு இரத்தம் வந்ததாக பிடரிப் பக்கம் அடி பட்டு இரத்தம் வந்ததாக ஜுலியா சொன்னார். எதற்கும் பயப்படாதே நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாகச் சொன்னா. அதன் பிறகு இரு பொலிஸ் காரார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் நடந்தவற்றைக் கூறினேன். யாவற்றையும் எழுதிக் கொண்டு, ஜுலியாவையும் விசாரித்தார்கள். அவ முதல் நாள் இரவு நடந்ததையும், சாம்லீ குடிபோதையில் வருவதையும் பொலிசுக்குச் சொன்னார். இரவு 11 மணியளவில் பொலிஸ் வீட்டை விட்டுப் புறப்படும் போது என்னை வீட்டிலேயே இருக்கும் படியும் கல்லூரிக்குப் போக வேண்டாம் எனவும் சொல்லிவிட்டுப் போனார்கள். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. லீ க்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் எனது நிலை என்னவாகுமென நினைத்தபோது பயம் இன்னும் கூடியது. ஜுலியா என்னைச் சமாதானப்படுத்திப் போய்ப்படுக்கும்படி கூறினா. சென்று படுத்தேன் நித்திரை வரவில்லை.

தொடரும்...

# கபாலி...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

Suit போடத் தகுதியற்றவர் என நினைத்தாலும் கபாலி Suit போட்டு மரியாதையாக நடக்கவொள்ள வேண்டும் என்றும் மனைவி வலியுறுத்துகிறார். அவர்களது குடும்ப வாழ்க்கை நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் நடைபெறுகிறது.



படத்தொடக்கத்தில் கபாலி அறிமுகமான பொழுது அவர் 'My Father Balaiya' என்ற புத்தகத்தை வாசிக்கிறார். இதனால் இப்புத்தகம் முன்னரைவிட இம்பொழுது மிகவும் பிரபலமாகி விட்டது. இப்புத்தகத் தின் ஆசிரியர் தனது தாத்தா தாழ்ந்த ஜாதியில் பிறந்ததால் பட்டகஷ்டங்களும், அவர் எப்படி அதை எதிர்த்துப் போராடினார் என்றும் அதில் விபரமாக எழுதியுள்ளார். இந்த ஆங்கில நூல் பல மொழிகளில் எழுதப்பட்டு வருகிறது. இப்புத்தகத்தின் கதை கபாலியின் நோக்கத்துடனும் தொடர்பு உடையதாக இருக்கிறது.

அனைவரும் குடும்பத்துடன் பார்க்கக்கூடிய ஒரு பொழுதுபோக்குப் படம் கபாலி.

# GTA Square Mall இல்
# AUGUST 13, 14ஆம் திகதிகளில்
# மாபெரும் களியாட்டத் திருவிழா

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொள்ளக்கூடிய

**EDUCATIONAL & TECHNICAL**

**3D PUZZLE GAME SHOW**

**1st Price: $100**
**2nd Price: $50**
**3rd Price: $25**

**TIME: Saturday 5:00pm - 9:00pm**
**Sunday: After 7:00 pm(Finals)**

**More Information**

**416.804.9555 / 416.286.0333**
**416.804.8999**

*5215 Finch Avenue East, Toronto, ON M1S 0C2*
*(Finch & Middlefield)*

# 338 நகைச்சுவைத் தொடர் ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



பிரான்சிலுள்ள 5 வது பெரிய நகரம் நீஸ். துறைமுகமும் அமைந்துள்ளது. நீஸ் என்றால் கிரேக்க மொழியில் வெற்றி எனப் பொருள்படும்.



வான வேடிக்கை பார்த்த கூட்டத்தினுள் வானில் சென்று தற்கொலைத்தாக்குதல் நடத்தியதில் 84 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயப்பட்டுள்ளனர். அந்தக் கவலை ஓய்வதற்குள் ஜேர்மனியில் முனிச் நகரில் 3..4..இடங்களில் தாக்குதல். பொதுமக்கள் 8 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர். அலைகள் ஓய்வதில்லை என்பதுபோல கொலைகள் ஓய்வதில்லை. பிரான்சில் தேவாலயம் ஒன்றில் மதகுரு ஒருவரை பயங்கரவாதிகள் கொன்றுள்ளனர்.

ஐ பொட் அகிலாண்டேஸ்வரி ரெலிபோனில் பயங்கர வாக்குவாதத்தில் இருந்தா. இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன் எனப் பெரிய ஐரோப்பிய சுற்றுலா திட்டமிட்டிருந்தா. தினமும் துப்பாக்கிச்சூடு, குண்டுவெடிப்பு. தான் வாங்கிய விமான ரிக்கெற் கான்சல் பண்ணி பணத்தை தரும்படி கேட்க அது நொட் றிபண்டபிள் என ரவல் ஏஜென்சி சொல்ல வாக்கு வாதம் நின்றபாடில்லை. அதிலும் ரவல் ஏஜென்ற் சொன்ன பதில் என்ன ஒவ்வொரு நாளும் துப்பாக்கிச் சூடு, குண்டுவெடிப்பு இல்லைத்தானே.. ஏன் வீணா பயப்பிடுறியள் என்று சொன்னது ஆத்திரத்தைக் கூட்டியது.



மரணத்திற்கு அழைப்பு! உலகண்ணை, ஜேர்மனியிலை பேஸ்புக்கிலை ப்பிரண்ட் ஆகி பிறகு எல்லாரையும் மோலுக்கு வரச்சொல்லி அங்கை வைச்சு சுட்டிருக்கிறான். பேஸ் புக்கிலை மரணத்துக்கு அழைப்பு விட்டிருக்கிறான்.

நல்ல காலம் என்னட்டை பேஸ்புக் இல்லை என்றபோது கொதியில் நின்ற ஐபொட் அகிலாண்டேஸ்வரி வெடுக்கெனத் திரும்பி காசில்லாமல் பாங்க் எக்கவுண்ட் வைச்சிருக்கிறியள். இலவசமா பேஸ்புக் எக்கவுண்ட் வைச்சிருக்கலாம் தானே....

உலகில் எத்தனையோ வருத்தங்கள். தினம் தினம் புதிய நோய்கள். பலர் இறக்கின்றனர். ஆராய்ச்சியாளர்கள் மருந்து வகைகளை கண்டு பிடித்தவண்ணம் இருக்கின்றனர். ஆனால் பேஸ் புக் அடிமைகள் ஒரு வேலையும் செய்யாமல் ஒருவரின் இறந்த செய்திக்கு லைக் போடுவதும் மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவருக்கு லைக்போடுவதும் தொற்று வியாதியாகிவிட்டது. இதற்கு மருந்தே இல்லையா? பேஸ்புக் மூலம் அழைத்துச் சுட்டுக்கொல்லும் அளவிற்கு பேஸ்புக் உதவி செய்கிறது. எங்கு பாத்தாலும் பிரச்சினை தான்.

இது நாகரிக உலகம். மக்களின் வாழ்க்கைமுறை, வளர்ப்புமுறையில் பலவித மாற்றங்கள். "தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரை" என்பர். இன்று குழந்தை பிறந்தவுடன் ராசி நட்சத்திரம் பார்க்கமுதலே பேஸ்புக்கில் அப்டேற் செய்கின்றனர். அதுவும் பிறந்தது ஆண்பிள்ளையா? பெண்பிள்ளையா எனத் தெரியமுதலே அப்டேற் செய்கின்றனர்.

விளையாட்டுப் பொருட்களாக ஐபொட் கைத்துப்பாக்கி கொடுத்து விடுகின்றனர். அது பலரின் வாழ்க்கையைக் கெடுத்து விடுகிறது. வீடுகளில் (லைசென்ஸ்சுடன்) வைத்திருக்கும் கைத்துப்பாக்கி குழந்தைகளின் கையில் கிடைத்து விட்டால் விளையாட்டாக சுட்டதனால் நண்பர் உறவினர் பேரன் பேத்தி ஆசிரியர்கள் பலர் கொல்லப்பட்ட புள்ளிவிபரம் எண்ணிட முடியாது.




ஆகஸ்ற் 02 (ஆடி 18ம் நாள்) குருப்பெயர்ச்சி, ஆடி அமாவாசை, ஆடிசெவ்வாய். அன்னம்மாக்கா, 2ம் திகதி குருப்பெயர்ச்சி சிம்ம ராசியிலிருந்து கன்னி ராசிக்கு குரு மாறுதாம் என்றபடி குருப்பெயர்ச்சி பலனை வேறு வேறு புத்தகங்களில் வாசித்துக் கொண்டிருந்தா.

ஒன் லைன் ஒடியல் கூழ்! வர வரக் காலம் எங்கேயோ போகுது... என பெருமூச்சு விட்டபடி சொன்னா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

பருப்பும் பாகுபலி சாறியும் ஒன்லைனில் ஓடர் பண்ணலாம். அப்பமும் அவிச்ச முட்டையும் ஒன்லைனிலை ஓடர் பண்ணலாம்.

ஐபொட் அகிலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை சில பாடல் ராகம் ஆரம்பிப்பதை வைத்து சொல்ல முடியும். ஆனால் செக்கண்ட்புளோர் செல்லம்மா என்ன சொல்ல அடியெடுக்கிறா என உலகருக்கு விளங்கிவிட்டது.



கபாலி பட விமர்சனமும், ஒன்லைனில் குடிவகைகள் வாங்கலாம் என ரி.வி.யிலும் றேடியோவிலும் மாறி மாறி செய்திகள் தபால் வினியோகிக்கும் கனடா போஸ்ற் வாழ்வா சாவா என இருந்த நிலைமையிலிருந்து புது வாழ்வு பெறுகிறது. வீட்டுக்கு வீடு வினியோகம்.

அது சரி செல்லம்மாக்கா சனி ஞாயிறு லோங் வீக்எண்ட் மெயில் டெலிவரி இல்லை ஆரன் போர்த்டேக்கு ஒன்லையினிலை ஓடர் பண்ணினா? எப்பிடி வரும்?

இந்தக்கதைகளை ஆத்திரத்துடன் கேட்டுக்கொண்டிருந்த ஆட்டிலறி அன்னம்மா வெடுக்கெனச்சொன்னா ஏன் கொறியர் சேவிசிலை எடுப்பிக்கலாம் தானே என்றா. ஒன்லைனிலை ஒடியல்கூழ் ஓடர்பண்ணப் போயினமாம்.



அப்துல் காலாமின் கனவை நனவாக்க நகைச்சுவை நடிகர் விவேக் கோடிக்கணக்கான மரங்களை நாட்டுவதற்கு ஏற்கனவே லட்சக்கணக்கான மரங்களை நாட்டி விட்டார். இஞ்சை என்னண்டா கஞ்சா (மருத்துவக் காரணத்துக்காக) கஞ்சா பயிரடலாம், பாவிக்கலாம். ஆலயங்கள் கல்லூரிகளுக்கு அருகில் குடிவகை தாராளமாக விக்கலாம். மதுபோதையில் காரோடி விபத்தில் இறப்பதும் அங்கங்களை இழந்து வாழ்நாள் முழுவதும் அவஸ்தைப்படும் அப்பாவிகள் எத்தனைபேர்?.



எல்லாம் நடந்தபிறகு வானொலி தொலைக்காட்சியில் இவற்றை எப்படி நிறுத்தலாம்? காரணம் என்ன எனக் கருத்துக் கேட்பதும் சர்வசாதாரணமாகி விட்டது.



அகிலா.....(ண்டேஸ்வரி)....கிட்டத்தட்ட 5000..வகையான குடிவகையை ஒன்லையினிலை ஓடர்பண்ணலாமாம்...உலகண்ணை எத்தனை வகை உங்களுக்கு தெரியும்? என செக்கணட்புளோர் செல்லம்மா கேட்க ராசம்மாக்கா தனக்குள் சிரித்து கொண்டா.

உலகர் சொன்னார் சமயகுரவர் 4 நாயன்மார் 64 திருக்குறள் 1330 அறுபடை வீடு கண்டம் 5 சமுத்திரம்...இவற்றை ஞாபகப்படுத்த முடியவில்லை. 5000 குடிவகைகளை எப்படி ஞாபகப்படுத்தி ஓடர்பண்ணப் போகிறார்கள்.

இனிமேல் பாடசாலைகளில் குடியியலுக்கு பதிலாக குடி..இயல் படிப்பிப்பார்களா?



லுக் அற் திஸ் கபாலி பட கட்அவுட்டுக்கு 50000 லிற்றர் பால் ஊத்தினவையாம் பிளேனிலை பெரிய விளம்பரம் என ஐ பொட் அகிலா காட்டிக்கொண்டிருந்தா ...எப்ப உலகண்ணை கபாலி பாக்கப்போறியள் என செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க



பிதிர் கடன் தீர்ப்பது என்ற புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தார் உலகர்.

ஆகஸ்ற் 1..15



1. சிவிக் விடுமுறை

2 ஆடி அமாவாசை, குருப்பெயர்ச்சி, ஆடிச்செவ்வாய்.

2. உலக நட்பு தினம்.

2. அலெக்சாண்டர் கிரகாம் பெல் நினைவுதினம். (ரெலிபோனைக் கண்டுபிடித்தவர்) (மார்ச் 3 1847- -ஒகஸ்ட் 2 1922

4. பொன் கணேசமூர்த்தி (நினைவு தினம்) (ஒகஸ்ட் 4 2006) எழுத்தாளர் வானொலி கலைஞர்.

5. வீரகேசரி நாளிதழ் ஆவணிப்பட்டி பெ. பெரி. சுப்பிரமணியம் என்பவரால் 1930 ல் கொழும்பில் தொடங்கப்பட்டது.




10. 610 முகமது நபி குர்ஆனைப் பெற்றநாள் இது இஸ்லாமில் "லாய்லாட்ஜ –காதர்" 'நாள் எனப்படும்.

12. சர்வதேச இளையோர் நாள்.



13. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியர்கள் தப்பிச்செல்லா வண்ணம் பேர்லின் சுவரை கட்ட ஆரம்பித்தது



13. international left hander's day


## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**

# இரண்டாம் வரம் - 2

ஆனால் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த பரிதாபம், ஒவ்வொரு சந்திப்பின் போதும் படிப்படியாக அவர்கள் இருவரிடத்தில் ஏதோ ஒருவகை ஈர்ப்பு உருவாக ரிஷி, நீரஜாவின் கவனத்தை பெற பெரும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினான். ஆனாலும் நீரஜா இன்னொரு மணவாழ்வுக்கு தயாராகவே இல்லை. அவள் கணவனினால் ஏற்பட்ட மனக்காயம் ஆறும் முன்னர் இன்னொரு வரை அவளால் நினைத்தும் பார்க்க முடியாது தவித்தாள்.

ரிஷியின் பிடிவாதமும் அவன் அவள் மீது காட்டிய தூய அன்புமே அவளை கொஞ்சம் கரைய வைத்தது. இதன் காரணமாகவே இன்று அவர்கள் ஒரு குடும்பமாக உணவு விடுதிக்கு வந்திருந்தார்கள். ஆனால் அவளால் ரிஷியின் உரிய துணை என்ற உரிமையுடன் அவனருகில் அமர்ந்து பயணிக்க முடியாது அவன் மகள் முன்னே சென்று அமர்ந்தது அவள் மனதை ஏனோ வருத்தியது. .

ரிஷியின் மகள் தனு நீரஜாவை தங்கள் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டு தாய் ஸ்தானத்தில் வைத்து பார்க்க மறுத்து விட்டது மட்டுமின்றி காரணமின்றி வெறுக்கவும் தலைப்பட்டது தனுவின் நடத்தைக்கு மூலகாரணமாகவும் அமைந்து விட்டது.

ரிஷியின் ஆதரவான அணைப்பு நீரஜாவின் வருத்தத்தை ஓரளவு சமாதானப்படுத்த கொஞ்சம் சுதாகரித்துகொண்டாள். அன்று அவர்கள் வீடு திரும்பிய பின்னர் அமைதியாக ரிஷியுடன் இதைப்பற்றி உரையாடவும் தலைப்பட்டாள்.

" ரிஷி உங்கள் மகள் தனுவின் தாயின் இடத்தை நான் ஒருபோதும் பறிக்கும் எண்ணம் எனக்கில்லை. ஆனால் தனு என்னிடம் வெறுப்பு கொண்டிருக்கிறாள். தன் தந்தையின் பாசத்தை நான் பங்கு போட்டு விடுவேனோ என்றும் பயப்பிடுகிறாள் போன்று இருக்கிறது. இதனால் நிம்மதியான வாழ்வு நமக்கு கிட்டுமா? என்பது சந்தேகமே. ஆதலால் நமது ஆசையை ஒரு புறமாக வைத்துவிட்டு நம் குழந்தைகளின் ஆசைக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? " என்று துயரை மறைத்த வண்ணம் கேட்டாள்.

ரிஷி பதறியபடி "என்ன நீரஜா சொல்கிறாய் ?. எத்தனையோ துன்பங்களை சந்தித்த நமக்கு ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருக்க இறைவன் நம்மிருவரையும் இணைத்துள்ளார். தனு சின்னப்பிள்ளை. அவளின் தாய் நோய் காரணமாக சிறந்த தாயாக இருக்க முடியாமல் போனாலும் அம்மா என்று அழைக்க அவள் இருந்தாள். அவள் மறைவுக்கு பின் அந்த வெறுமையை தனு உணருகிறாள். ஆனாலும் விடாப்பிடியாக அந்த இடத்தை அப்படியே வைத்திருக்க முனைகிறாள்".

"நீரஜா, தனு ஒரு சில வருடங்களில் தன் படிப்பு, காலேஜ் பின்னர் கலியாணம் என்று தன் துணையை தேடிக்கொண்டு போய்விடுவாள். அதேமாதிரித் தான் உன் மகனும். அதற்கு பிறகு தனியனாக மிகுதி வாழ்வு முழுவதும் நாம் தாம் கஷ்டப்பட வேண்டும். எம்மை வந்து பார்க்கக் கூட அவர்களுக்கு நேரமிருக்குமோ என்னவோ தெரியாது. அப்படியிருக்கையில் எனக்கேற்ற அன்பான துணையாக நீ இருக்கையில் தேவையில்லாமல் தனுவுக்காக விட்டுக் கொடுக்கிறேன் என்று விலகுவது என்ன நியாயம்?".

"அதுமட்டுமின்றி தனுவுக்கு இன்று புரியாவிட்டாலும் நிச்சயம் உன் அவசியம் காலம் செல்ல அவளுக்கு விளங்கிவிடும். அந்நேரம் அவள் உன்னை தாயாகவே கருதுவாள். அவள் நலனுக்காகவேனும் இப்பொழுது பொறுமை காக்க வேண்டும்".

ரிஷி அடுக்கிக்கொண்டே போனவன் நிறுத்தினான். அவன் கண்கள் குறும்பாக சிரித்தது. மெல்ல நீரஜா அருகே வந்தவன், "நீ எவ்வளவு தான் சொன்னாலும் என்னை மறந்து வாழப் போவதுமில்லை, நானும் உன்னை மறந்து இனி வாழப்போவது மில்லை. இது நமக்கு முதல் மணம் தவறி யதால் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பம், அதாவது இரண்டாவது வரம். இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடலாமா?" என்று கனிவாக காதருகே குசுகுசுக்க நீரஜா முகம் மலர்ந்தாள்.

இது என் நண்பியின் கதை. பெயரை மாற்றியுள்ளேன். இன்று என் நண்பி மிக இனிமையான வாழ்வு வாழ்ந்து கொண்டு இருக்கிறாள். அவளின் பொறுமையும் உண்மை அன்பும் கொண்டு ஓர் அழகான மகளை தான் ஈன்றெடுக்காவிட்டாலும், வென்றெடுத்திருக்கிறாள். தன் சொந்த முயற்சியில் ஒரு வெற்றிகரமான நிறுவனத்தையும் நடத்துகிறாள். தன் முன்னாள் கணவனினால் வாழ்வில் மிகவும் நொந்து போயிருந்தாலும் அவள் வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசிய பொழுது அமைதியாகவும், பொறுமையுடனும் வரவேற்றமையினால் இன்று எல்லோரும் போற்றும் பெண் மணியாக வலம் வருகிறாள்.



மீரா குகன்
ஜேர்மனி

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com




22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
SAMY & SONS
Wholesalers & Retailers
S&S
SINCE 1994
வரவேற்பு
விலை
தரம்
தெரிவு
நம்பிக்கை
நாணயம்
இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
அதிரடி மலிவு விற்பனை
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer, Pawn Broker, Chairs Rental Etc.
ஆகஸ்ட் 05ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 04ம் திகதி வரை
எமது வாடிக்கையாளர்கட்கு! ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!
3 for $10.00
குருதா ரொப்
சாறி பிளவுஸ், பிறா
சாறி உள்பாவாடை,
ஜட்டி,
பெனியன்
இன்னும் பல.
Each $10.00
டெனிம் பான்ஸ்,
Dress பான்ஸ்,
சேட், குர்தி சேட்,
பட்டுபாவாடை செற்
பான்சி Frocks,
சுரிதார் (All Sizes)
மில்க் குக்கர்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
பிரஷர் குக்கர்
வாமர், புட்டுக்குடம்
றைஸ் குக்கர்
ரொட்டி மேக்கர்
(சுமித், பிருந்தி, பிறீமியர்)
கனடாவில் எங்கும்
பெற்றுக்கொள்ள முடியாத
மலிவு விலையில்
புதிய வரவுகளாக
பட்டு, கட் வேக், பிறைடல்
சொவ்ற் சில்க்,
ஹாவ் அன் ஹாவ்
சீக்குயின்,
கொட்டன் சாறிகள்
ஸ்பெஷல் சுரிதார்
பான்ஸி லங்கா சூட்
குருத்தா பிளவுஸ்
குருத்தா சூட்
இன்னும் பல
எங்கும் கண்டிராத மலிவு விலையில்
OPEN
7 Days
10:00 am-
9:00 pm
$300 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு றைஸ் குக்கர்
இலவசம்
பான்ஸி பொருட்கள் 50¢ தொடக்கவிலையில்
TEL: 416-298-1599
Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)
1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com
$150 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு ஹொட் பொக்ஸ்
இலவசம்
மலிவோ மலிவு மலிவோ மலிவு மலிவோ மலிவு மலிவு
எண்ணில் அடங்காது பொருட்கள் மலிவு விலைகளில் ஒரு முறை வந்து பாருங்கள்
அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
PLEASE CHILL BEFORE SERVING
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD
Design your dreams with us
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை வடிவமைப்பாளர்கள்
40 New Delhi Drive Unit 56 Markham, Ontario L3S 0B5
Tel: (905) 554-5890



















**Free Real Estate Class -** Call: **416.321.6969**











விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***


